உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 29 | சௌமிய - தை - 10 - 2 - 70 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே,

–சம்பந்தர்

## முக்கட் செல்வன்

உலகில் உள்ள பலவகைக் கடவுள் வழிபாடுகள் அனைத்திலும் சிவ வழிபாடே தொன்மையானது என்பர். உலகின் பல பாகங்களிலும் ஆங்காங்கு இலிங்கத் திருவுருவம் கிடைக்கப் பெறுவதால், இவ்வழிபாடு அவ் விடங்களிலெல்லாம் பரவியிருந்தமை அறியப்படுகின்றது. 'அண்மையில் சிந்து சமவெளியில் புதைபொருள் ஆராய்ச்சியிற் காணப்பட்ட மறைந்த நகரங்களில் வாழ்ந்த மக்கள் சிவ வழிபாடு உடையவர்களாய் இருந் தமை நன்கறியப்படுகின்றது' என்றும், 'அதனால் நமது நாட்டில் சிவ வழிபாடு தொன்மைக் காலத்திலேயே

சிறப்புற்று விளங்கியது' என்றும் ஆராய்ச்சியாளர் துணிகின்றனர்.

பரதகண்டத்தில் பழம்பெரும் பாடல்களாய் விளங்கி வரும் வேதப் பாடல்களுள் சிவபெருமானைப் பற்றிக் கூறும் பகுதிகள் சிறப்புடையவையாய்த் திகழ்கின்றன. தமிழ்ப் பாடல்களுள் பழமை வாய்ந்தனவாகிய சங்கப் பாடல்களுள் சிவபெருமானது பெருமை தனிச்சிறப்புடன் பேசப்படுகின்றது. அஃதாவது, 'பெரியோன்,' நெடியோன், முதல்வன், ஒருவன், இறையோன்' முதலிய உயர் பெயர்களாலே சங்கச் செய்யுட்கள் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றன. சங்கச் செய்யுட்களுள்ளும் மிகப் பழமை வாய்ந்ததாகிய ஒரு பாட்டு ("வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்") பாண்டியன் ஒருவனை, 'சிவபெருமானது திருக்கோயிலை வலம் வருதற்குமட்டும் உனது குடை தாழட்டும்' என்று கூறி வாழ்த்துகின்றது. இப் பாட்டுப் பாண்டிநாட்டைக் கடல்கொள்வதற்குமுன் இயற்றப்பட்ட பழைய பாடல் என அறியப்படுகின்றது.

'இம்முதன்மை உடைய சிவபரம் பொருளைத் தமிழ் மக்கள் எப்பெயரால் குறித்தனர்' என்ற வினா எழும் பொழுது, 'சிவன்' என்பது இக்காலத்தில் வடமொழியாகக் கருதப்படினும், 'சிவந்த திருமேனியை உடையவன்' என்னும் பொருளில் முதற்காலத்தில் தமிழில் தோன்றிய சொல்லே எனக் கூறி, "சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" என்னும் அப்பர் திருமொழியைக் காட்டி நிலைநாட்டுகின்றனர் சிலர். அஃது எவ்வாறுயினும், மேற்குறித்த "வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்" என்ற பழந்தமிழ்ப் பாடல் சிவபெருமானை, 'முக்கட் செல்வர்' என்று குறிப்பிடுவதிலிருந்து, தமிழ்மக்கள் சிவபெருமானை, 'முக்கட்பெருமான்' அல்லது 'முக்கட் கடவுள்' என்று குறித்தனர் என்பது தெளிவாகின்றது.

'கடவுளர்களில் ஒவ்வொருவரைச் சிறப்பாகக் குறிப்பிடும்பொழுது, அவரவர்க்கு உள்ள சிறப்பியல்புகளைக்

குறித்து வழங்குதல் தமிழ்வழக்கு' என்பதை, 'யானை முகக் கடவுள், அறுமுகக்கடவுள், மாயோன்' முதலிய பெயர் வழக்கங்களால் அறியலாம். "சேயோன்" எனத் தொல்காப்பியத்துள் கூறப்பட்ட பெயர்க்கும், 'மாயோன்' என்றதை ஒட்டி, நிறத்தால் வந்த பெயர் எனப் பலரும் கூறிவரினும், முருகனை, 'சேய்' என்று கூறும் வழக்கமும் சங்கச் செய்யுட்களிலே காணப்படுதலாலும், 'முருகன்' என்பதற்கு, 'இளங் குழவியாயுள்ளவன்' என்பதே பொருளாதலாலும், முருகக்கடவுள் சிவபெருமானுக்கு மகன் என்று சங்கப் பாடல்களும் கூறுதலாலும் 'சேயோன்' என்பதற்கு, 'குழவிக் கடவுள், கடவுள் மகன்' எனப்பொருள் கொள்ளுதலே பொருந்துவதாம். இவ்வாறே கடவுளர் பெயர்கள் பலவும் அவரவரது சிறப்பியல்பைக் குறிப்பனவாய் இருத்தலால், தமிழ்மக்கள் சிவபெருமானை, 'முக்கட் கடவுள், முக்கணன், கண்ணுதற் கடவுள், கண்ணுதல்' என்ற பெயராலே பெரும்பான்மையும் குறித்து வந்தனர் என்றல் பொருந்துவதே.

சிவபெருமானைத் தமிழ்மக்கள் மூன்று கண்களை உடையவனாகக் கூறியது, அவனை அவர்கள் முதற் கடவுளாகக் கருதினமையாலேயாம். ஏனெனில், மக்கட்காயினும் தேவர்கட்காயினும், பிற உயிர்கட்காயினும் முகத்தில் இரண்டிற்கு மேற்பட்ட கண்கள் காணவோ, சொல்லவோ படவில்லை. கைகளும், தலைகளும் தேவர்கட்கு மிகுதியாகக் கூறுதல் உண்டு. ஆயினும், ஒவ்வொரு முகத்திலும் இரண்டு கண்களுக்குமேல் சொல்லப்படுதல் இல்லை. ஆகவே, 'தேவர் முதலிய அனைவர்க்கும் மேலான இறைவனுக்கு அம்மேன்மையைக் குறித்தற் பொருட்டு இரண்டு கண்களுக்குமேல் நெற்றியில் ஒரு கண் கூட, மூன்று கண்கள் உள்ளனவாகக்கொண்டு குறித்து வழிபட்டனர்' என்பது பெறப்படும். இஃது இன்றும் ஒருவரை நன்கு மதியாது பேசும்பொழுது, 'அவர் என்ன முக்கண் படைத்தவரோ' என்று கூறும் வழக்கத்தினாலும் விளங்கும். "கண்மேற் கண்ணும் சடைமேற் பிறையும் உடையார்" என்று திருஞானசம்பந்த

ரும், "கண்மேலும் கண்ணொன் றுடையாய் போற்றி" என்று திருநாவுக்கரசரும் அருளியவற்றில் இக்குறிப்பு அமைந்திருத்தல் காணலாம். எனவே, மூன்று கண்களை உடைமை முதற்கடவுளாந் தன்மையினையும், 'முக்கண்ணன்' என்னும் பெயர், அத்தன்மையினை உடைய முதல்வனுதலையும் குறிப்பனவாதல் வெளிப்படை.

முதல்வனுந் தன்மைக்கு அடையாளமாகச் சொல்லப் படுகின்ற மூன்றுவது கண்ணுகிய நெற்றிக்கண், சில உண்மைகளை உணர்த்துவதாயும் உள்ளது. முதலாவது, அறிவு அல்லது ஞானம் நெற்றியிலேதான் விளங்குவ தாகச் சொல்லுதல் மரபு. எனவே, நெற்றிக் கண், முழுதொருங்குணரும் பேரறிவாகிய ஞானக்கண்ணைக் குறிப்பதாகும். இனி, ஞானம் ஒளி; அஞ்ஞானம் இருள். ஆகவே, ஞானம் தோன்றும்பொழுது அஞ்ஞானம் அகன்றெழிகின்றது. அதனுல், அந்த நெற்றிக்கண் இருளை ஓட்டுகின்ற நெருப்பாகச் சொல்லப்படுகின்றது. ஒளிகள் யாவும் நெருப்பினது கூறே என்பது நன்கறியப் பட்டது. எனினும், 'ஒளியைத் தருவன ஞாயிறு, திங்கள், விளக்கு என்னும் மூன்றுமே' எனக் கருதப்படுகின்றது. அதற்குக் காரணம், நெருப்பிற்கு உள்ள சுடுந்தன்மை, விளக்குந்தன்மை என்ற இரண்டினுள் நெருப்பாய் உள்ளபொழுது விளக்குந் தன்மையைவிடச் சுடுந்தன் மையே மிகுந்து காணப்படுதலும், ஏனைய பொருள்களாய் உள்ளபொழுது சுடுந்தன்மையைவிட விளக்குந்தன்மை மிகுந்து காணப்படுதலுமாம். ஆயினும், 'ஞாயிறு, திங்கள், தீ எனச்சுடர்கள் மூன்று' எனக் கூறுதல் தொன்று தொட்ட வழக்கு என்பதை யாவரும் அறிவர். விளக்கு நெருப்பு என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. ஏனைய இரண்டின் ஒளிகளும் நெருப்பின் கூறேயாம். 'உலகிற்கு வருகின்ற நன்மைகள் யாவும் இறைவனுலேதான்' என் பது துணிபாகலின், நன்மைகள் பலவற்றுள்ளும் முதலா வதாகிய ஒளியும் அவனுல் வருவதேயாம். ஆகவே, உலகிற்கு ஒளியைத் தருகின்ற சுடர்கள், 'ஞாயிறு, திங்கள், தீ' என மூன்றுய்க் காணப்படுதலின், அவ்

வொளியைக் கண்களால் உலகிற்கு வழங்குகின்ற இறைவனை மூன்று கண்கள் உடையவனாகவே கருதினர் முன்னோர். "பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக" என்ற நற்றிணைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலும் இக்கருத்து ஒருவாறு அமைந்துள்ளது.

'இறைவனது மூன்று கண்களும் உலகிற்கு ஒளி வழங்கும் மூன்று சுடர்களே' என்னும் முன்னோரது கொள்கையை இனிது விளக்கி நிற்பது பின்வரும் பழைய வரலாறு.

'சிவபெருமான் உமாதேவியை மலையரையன் கொடுக்க மணம்புரிந்துகொண்டபின்பு, கயிலாயத்தில் இருவரும் இன்பமாக விளையாடல் புரிந்துகொண்டிருந்தனர். அவ்வாறு இருக்கும் நாட்களில் ஒருநாள் சிவபெருமான் தமது இருக்கையில் அமர்ந்திருக்கும்பொழுது, உமாதேவியார் விளையாட்டாகப் பின்னே வந்து தமது இருகைகளாலும் சிவபெருமானது இரண்டு கண்களையும் மூடினர். (அப்பொழுது சிவபெருமானுக்கு இரண்டு கண்கள்தாம் இருந்தன என்பது கொள்கை.) கணவன் மனைவியர் விளையாட்டில் மனைவியர் இப்படிப் பின்னால் வந்து கணவரது கண்களைக் கையால் மூடி, 'நம் கண்களை மூடினவர் யார்' என்று அவர் திகைக்கும்படி செய்தல் ஒரு விளையாட்டு. அம்முறையில் அம்மையார் இறைவரது கண்களை மூடிய உடனே உலகெங்கும் எல்லா ஒளிகளும் மறையப் பேரிருள் மூடிக்கொண்டது. கண்ணிற்கு ஒரு பொருளும் தெரியவில்லை என்றால், யார் என்ன செயலைச் செய்ய முடியும்? எந்த உயிர் என்ன செயலைச் செய்ய முடியும்? அதனால் அனைத்துலகிலும் உள்ள அனைத்துயிர்களும் அளவற்ற துன்பங்களுக்கு உள்ளாயின. உடல் ஓம்பும் தொழிலேயன்றி, மற்றைய அறச்செயல்கள், கடவுள் வழிபாடுகள் அனைத்தும் நடவாதொழிந்தன. இப்பேரிடரை உணர்ந்த சிவபெருமான், அம்மை மூடிய கைகளை வாங்குதற்குள்ளே நெற்றியில் ஒருகண் தோன்றுமாறு செய்து விழித்தார்.

அது நெருப்பின் நீளொளியாகி எங்கும் பரவி இருள் முழுவதையும் ஓட்டிற்று. நெருப்புக் கண் புறப்படவே, அம்மையார் அஞ்சிக் கைகளை எடுத்துக்கொண்டு இறைவனை வணங்கினர். உமாதேவியார் சிவபெருமானது கண்களைத் தம் கையால் மூடித்திறந்தது ஒரு நொடி நேரமாயினும், அஃது உலகிற்குப் பல யுகங்களாய் விட்டது. ஆகவே, அப்பொழுது விளைந்த அழிவுகளை அளவிட்டுச் சொல்லுதல் இயலாது. அதனால், சிவபெருமான் தேவியை நோக்கி, 'நீ விளையாட்டாகச் செய்த இந்தச் செயலினால் எத்துணை அழிவு உண்டாயின! அவை அனைத்திற்கும் நீ கழுவாய் (பிராயச்சித்தம்) செய்து கொள்ளல் வேண்டும். கழுவாய் அனைத்திலும் மேலானது நம்மை வழிபடுதலே. உன்னையும், நம்மையும் பாவம் வந்து அணுகாது ஆயினும், யாரொருவராயினும் பாவம் செய்தல் கூடாது என்பதையும், பாவத்திற்குச் சொல்லப்படும் கழுவாய் அனைத்திலும் மேலானது நம்மை வழிபடுதலே என்பதையும் உலகம் உணர்ந்து உய்தற்பொருட்டு நீ காஞ்சியில் சென்று நம்மை வழிபடுக, என்று கட்டளையிட்டு விடுத்தார். அதன்படியே உமாதேவியார் காஞ்சியை அடைந்து அறச்சாலை நிறுவி முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து, சிவபூசையும் செய்து, இறைவனோடு சேர்ந்தார்.'

நெற்றிக் கண்ணைக் குறிப்பிடும் இடத்தில் இளங்கோவடிகளும் இவ்வரலாறு பற்றியே, "நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டம்" என்றார். சாத்தனாரும் மணிமேகலையில், 'நுதலினிடத்தே விழித்த கண்' என்னும் பொருள் தோன்றுமாறு, "நுதழ் விழி நாட்டம்" என்று கூறினர். இவற்றால் இவ்வரலாற்றின் பழமை விளங்கும்.

இவ்வரலாற்றினால், 'உலகில் உள்ள ஒளிகள் யாவும் இறைவன் திருமேனியின் ஒளியே' என்பதை உணரும் முகத்தால், அவனது முதன்மையை உணர்ந்து கொள்கின்றோம். இவ்வரலாற்றைத் தத்துவ நூலாகிய சிவஞான சித்தியும் மேற்கூறிய உண்மையை விளக்குதற்குச் சான்றாக எடுத்துக்காட்டுகின்றது.

நாயகன் கண் நயப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாயிருளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பின்
தேயமார் ஒளிகள் எல்லாம் சிவன்உருத் தேச தென்னார்.

இத்தகைய அரிய உண்மையை விளக்கும் இவ்வரலாற்றைத் திருநாவுக்கரசர் தமது தசபுராணத்திருப்பதிகத்துள் எடுத்தோதி அருளும் திருப்பாடல் பின்வருவது.

நலமலி மங்கை நங்கை விளையாடி ஓடி
நயனத் தலங்கள் கரமா
உலகினை ஏழும் முற்றும் இருள்மூட மூட
இருளோட நெற்றி ஒருகண்
அலர்தர அஞ்சி மற்றை நயனங் கைவிட்டு
மடவாள் இறைஞ்ச மதிபோல்
அலர்தரு சோதி போல அலர்வித்த முக்கண்
அவனும் நமக்கொர் சரணே.

'மகளிருள் தலையாயினமைபற்றி. 'நங்கை' என்னும் பெயருக்கு உண்மையாக உரியவளாகிய உமையம்மை கணவனோடு விளையாடும் நலம்மலி - அழகு நிறைந்த மங்கைப்பருவத்தளாய் இருந்து விளையாடுகின்றகாலத்து அவர் அறியாதவாறு பின்பக்கமாக ஓடி ஏழுலகினையும் இருள் மூடிக்கொள்ளுமாறு அவரது நயனத் தலங்களில்-கண்களில் தன்கரங்கள் பொருந்துமாறுவைத்துமூட, சிவபெருமானது நெற்றியிலே ஒருகண் அலர் தலைக்கண்ட உடனே அச்சங்கொண்டு கண்களை மூடிய கைகளை அப்பால் நீக்கி வணங்குதலும், அவளது அச்சத்தைப் போக்கி, முன்பே சந்திரனையும், சூரியனையும் ஒவ்வொரு கண்ணாகக் கொண்டிருந்ததுபோல நெருப்பையும் ஒரு கண்ணாக என்றும் இருக்குமாறு செய்து, அதனால், 'முக்கண்ணன்' என்ற பெயரைப் பெற்றவனாகிய அவனே நமக்கு ஒப்பற்ற புகலிடமாவன்' என்று அறிவுறுத்தருள்கின்ற அப்பர் திருமொழி நம் அனைவரையும் உய்விக்கும் அருட்டிருமொழியாகும். அதனை ஊன்றி உணரும் முகத்தால், ஆன்றோர் கொண்ட அரும்பெருங்கொள்கையை ஐயமற உணர்ந்து, முக்கட்செல்வனை அரும்பெறற் புகலிடமாக அடைந்து உய்வோமாக.

உ

குருபாதம்

குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

## மெய்யறிவு

உலகில் வாழும் உயிர்கள் எண்ணற்றவை. ஆயினும் அவை ஒரு நிகரனவாயில்லாது பல்வேறு வகையாய் ஏற்றத் தாழ்வுடன் இருத்தலைக் காண்கின்றோம். இவ் ஏற்றத்தாழ்வு எதனால் ஆயது என்று உற்றுநோக்கின், அறிவு வேறுபாட்டால் ஆயதே என்பது தெளிவு. ஓரறிவுயிர், ஈரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈருக அறிவுபற்றியே உயிர்கள் வகுத்துக் கூறப்படுதலை நாம் நன்கறிவோம். ஐந்தறிவோடு மற்றைய உயிர்கட்கில்லாத ஆருவது அறிவைப் பெற்றிருத்தல் பற்றியே மக்களுயிர் ஏனை எல்லா உயிர்களினும் சிறப்புடையதாய் விளங்குகின்றது. மக்களாய்ப்பிறந்தும் அறிவு குறைந்தவராயின், அவர்களை உலகம் மக்கள் என்னது மாக்கள் என்றே கருதுகின்றது. ஆகவே, 'உலகனைத்தும் விரும்புவது அறிவையே' என்பது விளங்கும்.

அறிவுக்கு எதிராய் உள்ளது அறியாமை. அறிவையே விரும்புகின்ற உலகம், அதற்கு எதிரான அறியாமையை வெறுத்தல் சொல்லவேண்டுவது இல்லை. உலகம் அறியாமையை வெறுத்து, அறிவை விரும்புதற்குக் காரணம், அறியாமையால் துன்பமும், அறிவால் இன்பமும் விளைதலேயாகும். அறியாமையாவது யாது என்று வினவுவோர்க்கு, நல்லதைத் தீயது என்று விரும்பிக் கைக் கொள்ளுவதுதான் அறியாமை என்று விடைகூறுகின்ருர் திருவள்ளுவர்.

> பேதைமை என்பதொன் றியாதெனின், ஏதங்கொண்டு
> ஊதியம் போகவிடல். —குறள்.

இன்னும் அவர்,

> "பொய்படும் ஒன்ருே புனைபூணும் கையறியாப்
> பேதை வினைமேற் கொளின்."

என்கிருர். அறியாமையின் விளைவு இவ்வாருக இருக்குமாயின், அதனை உடையவர்களுக்குத் துன்பம் உண்டாகாமல் வேறென்ன உண்டாகும்? அதனுல், உலகம் அறியாமையை வெறுத்து அறிவைப்பெற விரும்புகின்றது.

அறிவைப்பெறவே அனைவரும் விரும்பினுலும், எது அறிவு, அறியாமை என்பதைத் தெரிந்துகொள்வதற்கே அறிவு தேவைப்படுகிறது. இதனைத் திருமூலர்,

" அறிவறி வென்றங் கரற்றும் உலகம்;
அறிவறி யாமை யாரும் அறியார்;
அறிவறி யாமை கடந்தறி வானுல்,
அறிவறி யாமை அழகிய வாறே.''

என்று நயம்பட விளக்குகின்ருர்.

எல்லாரும் அறியாமையை நீக்கி அறிவைப்பெற வேண்டும்; பெறவேண்டும் என்றுதான் ஓயாமற் சொல்லி வருகிருர்கள். ஆனுலும், 'எது அறிவு, எது அறியாமை' என்பதை உண்மையாக அறிந்தவர் உலகில் எத்துணைப்பேர்? ஒருவரும் இல்லையென்றே சொல்லிவிடலாம் என்று முதலில் குறிப்பிடுகிருர் திருமூலதேவர்.

இப்படிக் குறிப்பிட்ட அவர் பின்பு, 'அறியாமையை நீக்க வேண்டும், என்று யாவரும் விரும்புவதனுல், எல்லாருடைய அறிவும் அறியாமையோடு கூடியனவாக உள்ளனவே என்பது புலனுகின்றது. 'அறிவு' என்று சொல்லப்படுவது மெய்யான அறிவாய் இருக்குமானுல் அஃது அறியாமையோடு கூடவேண்டுவதில்லையன்ரே? எல்லாருடைய அறிவும் அறியாமையோடு கூடியனவேயாயின். 'அவையனைத்தும் மெய்மையான அறிவல்ல' என்பது முடிவாகின்றதன்ரே? எல்லாருடைய அறிவும் மெய்யறிவாக இல்லையென்ருல், நம் எல்லாரினும் வேருக மெய்யறிவுடைய ஒருவன் இருத்தல் வேண்டும் என்பதும் தானுகவே அமைவதாகின்றது. ஏனெனில், மெய்யறிவுடையவனுக ஒருவனும் இல்லை என்ருல் 'அறிவு அறிவு' என்று அறிவைச் சிறப்பித்துப் பேசுவதால் என்ன பயன் உண்டாகும்? ஆதலால், ஒருவன் மெய்யறிவுடையவனேயாய் இருத்தல் வேண்டும். அவ்வொருவன்

தான் இறைவன் - கடவுள். தன்னைப்போல வேறுஒருவரேனும் இல்லாத காரணத்தால் அவன், 'ஒருவன்' என்றே சொல்லப் படுகிறான். இதனையே திருவள்ளுவர், "தனக்குவமை இல்லாதான்" என்று சொல்லி, அவன் ஒருவனே மெய்யறி வுடையவன், என்பதை, "வாலறிவன்" என்பதனாற் குறிப்பிட்டார். இந்த ஒன்றை - அதாவது, 'ஆன்மாக்களாகிய நம் அறிவெல்லாம் மெய்யறிவல்ல; இறைவனது அறிவு ஒன்றே அறியாமையோடு கலவாத மெய்யறிவு; நம்மனோர் அறிவெல்லாம் அத்தகையன அல்ல' என்பதை அறிந்து விட்டால், அறிவு அறியாமைகளைப் பற்றி நாம் முதலில் நன்கு அறிந்தவர்களாவோம்.

இவ்வாறு அறிந்தால் அதன்பின்பு அவ்வறிவினால் நல்ல தொரு பயன் விளையும். அஃதாவது, மெய்யறிவாகிய இறைவ னது அறிவுதான் எல்லாவற்றையும் அறிதலேயன்றிப் பிற எல்லா அறிவுகளிலும் கலந்துநின்று அவற்றை அறிவித்தும் நிற்கின்றது. ஆகவின், அதனைக் கேள்வி வாயிலாக நாம் அறிந்தபின்னர்ப் பிற பொருளை அறிதலை விடுத்து நம் அறிவுக்கறிவாய் நின்று அறிவித்து வருகின்ற அவ்வறிவையே நோக்கிநிற்கும் நிலை உண்டாகும். அங்ஙனம் உண்டாகு மானால், எந்தப்பொருளை அறிகின்றோமோ அந்தப்பொருளின் தன்மையாகிவிடுவதே நம் அறிவின் தன்மையாதலால், பிற பொருள்களை விடுத்து மெய்யறிவாகிய இறைவனது அறிவை அறிகின்ற பொழுது நம் அறிவும் அறியாமை என்பதின்றி அந்த மெய்யறிவே யாகிவிடும். அவ்வாறு ஆவதுதான் அறிவு அறியாமைகளைப் பற்றி நாம் நன்குணர்ந்ததன் பயனாகும். இதனைத்தான் திருமூலர் மேற்காட்டிய திருமந்திரத்துள்,

> "அறிவு, அறியாமை கடந்து, அறிவானால்,
> அறிவு, அறியாமை அழகிய வாறே."

என்று விளக்கினார். எனவே, ஒருவர் உண்மையாக அறியா மையின் நீங்கி மெய்யறிவைப் பெறுதல் என்பது இதுவே யாதல் வெளிப்படை. இம் மெய்யறிவைப் பெற்றவரது உள்ளத்தைத்தான் இறைவன் தனக்குரிய இடமாகக்கொண்டு அங்கே நீங்காது நிலைபெற்று விளங்குகின்றான்.

" அறிவுடை யார்நெஞ் சகலிட மாவது;
அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது;
அறிவுடை யார்நெஞ்சொ டாதிப் பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் ருனே."

என்பது திருமந்திரம். எனவே, 'அறிவு, அறிவு' என்று அனைவராலும் சிறப்பித்துப் பேசப்படும் அறிவு மெய்யறிவே யன்றிப் பிற அறிவுகளல்ல என்பது தேற்றம். திருவள்ளுவரும்,

" அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்."

என்று அறிவு ஒன்றையே சிறந்த பொருளாகக் கூறினர். அதன்பின்பு 'அறிவாவது யாது' என்று வினவுவார்க்கு,

" சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு"

என்று, 'மனத்தை அது சென்றபடியே செல்ல விடாமல், தீயதினின்றும் நீக்கி, நல்லதிற் செலுத்துவதே அறிவு' என்று கூறினர். அதன்பின்பு 'நல்லதாவது பிறிதோர் உயிர்க்கு வரும் துன்பத்தைத் தனக்கு வந்ததுபோல நினைத்து, அத் துன்பத்தை நீக்கி அதற்கு நலம் செய்வதே' என்பதை,

" அறிவினன் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தன்னோய்போல் போற்ருக் கடை"

என்று விளக்கினர். அதன்பின்பு.

" நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்ருர். அஃதாவது, 'தனக்காயினும், பிறர்க்காயினும் நிலைத்த பொருளைத் தேட நினையாமல், நிலையாத பொருளைத் தேட நினைப்பது அறிவிற்கு இழுக்காகும்' என்ருர். 'இந்த இழுக்கினுற்றுன் நீங்காப் பெருந்துன்பமாய் உள்ள பிறவிப் பெருந்துன்பம் விளைகின்றது' என்பதை,

" பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணப் பிறப்பு "

என்று விளக்கினர். பொருளல்லன – நிலையாதன ; பொய்ப் பொருள். பொருள் – நிலைத்தது ; மெய்ப்பொருள். இம் மெய்ப்பொருளை உணரும் உணர்வையே திருவள்ளுவர் " மெய்யுணர்வு " என்கிறார்.

சிலர், 'ஐம்புலன்வழிச் செல்லாது மனத்தை ஏதேனும் ஒன்றில் நிறுத்தினல் போதும் ; அதுவே, தாரணை, தியானம், சமாதி' என்பனவாய் வீடுபேற்றைத் தந்துவிடும் என்று நினைக்கின்றார்கள். 'அந்த அளவில் நிற்பதால் பயனில்லை' என்பதைத் திருவள்ளுவர்,

" ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு "

என்று கூறி,

" பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு "

என்று, 'செம்பொருளாகிய இறைவனை அறிவுக்கறிவாக அறிவினுள்ளே அறிந்து நிற்பதுதான் உண்மையான அறிவு' என்று முடிவு கூறினர்.

" அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே
அறிவுதனை அருளினல் அறியாதே அறிந்து
குறியாதே குறித்து அந்தக் கரணத்தி னேடே
கூடாதே வாடாதே குழைந்திருக்க "

வேண்டும் என்கின்றது சிவஞானசித்தி. இந்த அருள் நெறியையே குறிக்கோளாகக் கொண்டது அறநெறி என்பதை மேற்கூறியவற்றல் உணர்ந்து உலகம் பயனடைவதாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான், முதுபெரும்புலவர்.
**திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.**

(மலர் 29, இதழ் 2, பக்கம் 126ன் தொடர்ச்சி)

## சீவன் முத்தி

மாணாக்கன் : பரமுத்தி, அபரமுத்தி, பதமுத்தி என்பவற்றை விளக்கினீர்கள் ; 'சீவன்முத்தி' என்பது யாது ?

ஆசிரியர் : ஞானத்தில் ஞானமாகிய நிட்டையின் பயனாக அடையப்படும் பரமுத்தி - அஃதாவது 'சாயுச்சம்' என்னும் நிலையை இவ்வுலகில் இவ்வுடம்போடு கூடியிருக்கும் நிலையிலே பெற்றிருத்தலே 'சீவன்முத்தி' எனப்படுவது. இந்நிலையில் நின்றோர்க்கு, 'ஆகாமியம், சஞ்சிதம்' என்னும் இருவகை வினைகளும் இல்லாது ஒழிந்தனவாயினும், பிராரத்தம் என்பது இருத்தலின், அஃது உள்ளவரையில் உடம்பும் நீங்காது நிற்கும். ஆயினும் அஃது உடலளவாய் நின்று ஒழியுமேயன்றி, உயிரைத் தாக்கி உலகத்தோடு தொடர்பு படுத்துதல் இல்லை. ஆகவே, சீவன் முத்தி நிலையை அடைந்தோர், எஞ்ஞான்றும் இறை நிறைவில் அழுந்தி இறைவனோடு தொடர்புற்று நிற்றலன்றி உலகத்தோடு தொடர்புற்று நிற்றல் இல்லை. இந்நிலைதான், 'நிட்டை நிலை' என்று சொல்லப்படுகின்றது. இந்நிலையில் பகல், இரவு முதலிய கால வேறுபாடுகளும், உலக நிகழ்ச்சிகளும், பிறவும் புலனாதல் இல்லை. அதனால், சமய அனுட்டானம், சாதி குல வரம்பு, உறவு பகை முதலிய வேறுபாடு ஒன்றும் அவர்களிடம் காணப்படுதல் இல்லை. இந்நிலையை அவர்கள் முயன்று பிடித்தல் இல்லை. அதன்கண் அவர்கட்கு எல்லையில்லாததோர் இன்பம் தோன்றுதலால், மது உண்ட வண்டு அம்மலரிலே மயங்கிக் கிடத்தல் போல, இறைவனது திருவடி வியாபகத்துள் நிற்பர். "மாசில் வீணையும்", "கனியினும் கட்டிபட்ட கரும்பினும்" என்பனபோன்ற திருப்பாடல்களின் அனுபவம் இங்கு நினைக்கத்தக்கது.

மாணாக்கன் : சீவன்முத்தர்க்கும் பிராரத்தம் காரணமாக உடம்பு நீங்காது நிற்றலின், பசி, தாகம், வெயில், பனிகளால்

உண்டாகும் வெம்மை, குளிர் முதலியன தோன்றுது ஒழிதல் கூடாதன்றே? அதனல், அவை காரணமாகவேனும் உலகத்தில் தொடர்புற்று நிற்கவேண்டிய நிலை அவர்கட்கு உண்டாகுமன்றே?

ஆசிரியர்: உடம்பு காரணமாக வரும் பசி முதலியவை காரணமாக அவர்களது அறிவு புறத்தே வருதல் எவையேனும் சில நேரமேயன்றிப் பிறர்போல எப்பொழுதும் அன்று. அந்நிலையிலும் அவர்கள் இயல்பாகக் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, சருகு, நீர், காற்று முதலியவைகளையே உண்டு, பொது இடங்களிலும், புறத் திண்ணைகளிலும், மர நிழல்களிலும் தங்குதலோடு அமைதலன்றிச் சுவையான உணவுகளையும், நல்ல பாங்கான உறைவிடங்களையும் தேடிச் செல்லார். "அகலிடமே இடமாக ஊர்கள் தோறும் - அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம் - புகலிடமாம் அம்பலங்கள்; பூமிதேவி யுடன் கிடந்தால் புரட்டாள்", "உடுப்பன கோவணத்தொடு கீள் உளவாமன்றே" என்ற நிலையே அவர்களுடைய நிலை.

அன்பும், அறமும் உடைய பிறரால் அவை கொடுக்கப்படின், அதனையும் 'சிவனருள்' என்று எண்ணி மறுக்காமல் கொள்வர். சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் என்பதில் சிறிதும் வழுவாதவன் இறைவன் ஆதலின், அவன் இச் சீரடியார்க்கு வேண்டத் தக்கதை அறிந்து வேண்டும்பொழுது கிடைக்குமாறு செய்துநிற்பான் என்பதனையும் நாம் மறத்தல் கூடாது. 'இவ்வடியார்கள் நமக்கு வேண்டுவனவற்றை இறைவன் கொடுப்பான்' என்று அவற்றை எதிர்நோக்கியிருத்தல் இல்லை. ஆயினும், அவன் தானே முன்வந்து அவர்கட்கு அவைகளைக் கிடைக்கச் செய்வான். அப்பர், சுந்தரர் இருவர்க்கும் இறைவன் கட்டமுது கொணர்ந்து கொடுத்ததும், சுந்தரருக்கு இரந்துவந்து சோறிட்டதும், ஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகை முத்துக்குடை முதலியவற்றைத் தானே கொடுத்ததும், திருவீழிமிழலையில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் இருவர்க்கும், "கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டம் உறிர் எனினும் - சால நும்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றேம்" என்று சொல்லி நாள் தோறும் படிக்காசு அருளியதும் போல்வன இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாம். இவ்வாற்றல் இவர்கள் கவலையற்றிருப்பதால், இவர்களது செயல் சில வேளைகளில் இளஞ் சிறுர்களது செயல் போலவும், பித்துக்கொண்டவர் செயல்போலவும், களிப்பு மிகுதியால் பாடுதல், ஆடுதல் முதலியனவாக நிகழும்.

மாணுக்கன் : பசி, தாகம், வெம்மை குளிர் முதலிவை காரண மாகவன்றி அவர்கட்கு வேறு செயல்விருப்பம் ஒன்றும் நிகழ்தல் இல்லையோ ?

ஆசிரியர் : உலகில் அவர்கட்கு எவ்வகைப் பற்றும் இல்லா மையால் உலகியல் பற்றிய விருப்போ, வெறுப்போ, ஒன்றும் அவர்கட்கு உண்டாதல் இல்லை. உடம்பு பற்றிவரும் அச்சமும் அவர்கட்கு இல்லை. "அஞ்சுவது யாதொன்றும் இல்லை", "நாம் ஆர்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்" "வானந் துளங்கில் என்; மண் கம்பம் ஆகில் என்" என்ற அப்பர் திருமொழியை நோக்கின், இது விளங்குவதாகும். ஆகவே, உலகியல் பற்றிய விருப்பு, வெறுப்பு அவர்கட்கு உண்டாதல் இல்லை. ஆயினும். எவையேனும் சில செயல் விருப்பம் நிகழ்வ தாயின், அஃது இறைவன் உயிர்களை உய்விக்க வேண்டி எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களுக்குச் சென்று வணங்கு தல், அவற்றிற்கு ஆவனவற்றைச் செய்தல், மெய்யடியார் களுடன் கூடி இறைவனது புகழைப் பேசி இன்புறுதல் இவை போல்வனவாகவே இருக்கும். இவையெல்லாம் அவர்கள் தம் மியல்பில் செய்யினும், அவை உலகிற்கு நலந்தருவனவாக அமையும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய தோத்திரங்களாகிய திருமுறைப் பாடல்கள் இவ்வாறு அமைந் தனவே.

இனித் தாம்பெற்ற இன்பத்தை உலகனைத்தும் பெறவேண் டும் என்னும் கருணையும் ஒவ்வொரு சமையம் இவர்களது உள்ளத்தில் எழுவதுண்டு. அதன் பயனுகவே திருமந்திரம், சிவஞானபோதம் போன்ற தத்துவ நூல்கள் உலகிற்குக் கிடைத் தன. இவ்வியல்புடையவரே உலகிற்கு நல்வழி காட்டுதற்கு உரியர் என்னும் கருத்தினைற்ருன் திருவள்ளுவர், 'நீத்தார் பெருமை' என்ற ஓர் அதிகாரத்தைத் தமது நூலில் பாயிரப் பகுதியிலே வைத்துள்ளார். ஆகவே, சீவன் முத்தர்க்கு அவரது அறிவு இச்சை செயல்கள் ஒவ்வொருபொழுது புறத்தே செல்லு மாயின், அப்பொழுதும் இந்நிலையில் அவை நிகழ்தலன்றி, வேறுவகையில் நிகழமாட்டா.

பிராரத்தங் காரணமாக உடலுக்கு இன்பம் வரினும், துன் பம் வரினும் இன்பத்தின் மகிழ்தலோ, துன்பத்தின் வருந்து தலோ இன்றி இருதிறத்தினும் ஒரு தன்மையராய், இறைவன் திருவடி நிழலில் அகலாது நிற்பர். "பரஞானத் தால்பரனைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர் ; பதார்த்தங்கள் பாரார்" என்று சிவஞானசித்தி கூறுவது இச் சீவன்முத்தி நிலையையே.

இந் நிட்டை நிலையை எய்தினோர்க்கும், பரமுத்தியை அடைந்தோர்க்கும் உள்ள வேறுபாடு, முறையே உடம்பு இருத்தலும், இல்லாமையுமாகிய இவையேயாம். ஆகவே, பரமுத்தி அடைந்தோர் உடம்பை விட்டுப் பெறும் இன்பத்தைச் சிவன் முத்தர் உடம்பொடு நின்றே பெறுகின்றனர். 'ஆகவே, உடம்பு நீங்கியவுடன் இவர்கள் நேரே சிவசாயுச்சமாகிய பரமுத்தியைப் பெறுவர். அதனால் இவர்களை,

" எண்ணும் இகலோகத்தே முத்திபெறும் இவன்றான்
எங்கெழில்என் ஞாயிறெடைக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன் "

" அந்நிலைமை இந்நிலையின் அடைந்தமுறை யாலே"

என்று சிவஞான சித்தியும்,

" மூதறிவோர்க்கு — அம்மையும் இம்மையே யாம் "

என்று திருவருட் பயனும் கூறுதல்போலப் பரமுத்தியை அடைந்தோர் உடம்பு நீங்கிப் பெறும் இன்பத்தைச் சிவன் முத்தர் உடம்பொடு நின்றே பெறுகின்றனர் என்க. இதனால், இவர்கள் உடம்பு நீங்கிய உடன், சிவசாயுச்சமாகிய பரமுத்தியைப் பெறுதலன்றி வேறில்லை என்பதும் உணர்ந்துகொள்க. சிவன் முத்தரையே தமிழில், 'அணைந்தோர்' என்று கூறுவர்.

(தொடரும்)

---

## விசேஷ நாட்கள்

### 11—2—70 முதல் 13—3—70 முடிய

| | |
|---|---|
| 13—2—70 | வேலூர்க்கிருத்திகை |
| 18—2—70 | பிரதோஷம் |
| 24—2—70 | எறிபத்த நாயனார் திருநக்ஷத்திரம் |
| 3—3—70 | காரிநாயனார் ,, |
| 4—3—70 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் கனகாபிஷேகம்கொண்டருளிய திருநக்ஷத்திரம் |
| 5—3—70 | பிரதோஷம் |
| 6—3—70 | மகாசிவராத்ரி |
| 7—3—70 | கோச்செங்கட்சோழநாயனார் திருநக்ஷத்திரம் |
| 13—3—70 | வேலூர்க் கிருத்திகை. |

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராசப் பிள்ளை B. A.,

( மலர் 29, இதழ், 2 பக்கம் 97 இன் தொடர்ச்சி )

31 மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

குறிப்புரை :- மண் - பூலோகம். வான் - சுவர்லோகம். வேதகத்தான் - வேதப்பொருளானவன். பண் அகம் - நிறைவு பட்ட மனம். இன்னிசை - நாதம். இஃது அனுபவிகளுக்குப் புலனாவதோர் தொனி என்க. கண்ணகம் - அறிவினிடம்.

நாத மயமான சிவனையே காதலித்தேன் என்பதாம். 31

32 தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையு
மேவு பிரான்விரி நீருல கேழையுந்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருட் பாடலு மாமே.

குறிப்புரை :- தாவுதல் - கடத்தல். பாவுதல் - வியாபித்தல். பாடலும் ஆமே - பாட முடியாது. (அளவுபடுத்த முடியாது).

அகண்ட வியாபகமான பொருளை அளவுபடுத்த முடியாது என்பதாம், 32

33 சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

குறிப்புரை :- சாந்து - கலவைச்சாந்து. கவரியின் கந்தம் - கத்தூரியின் மணம். வேந்தன் - சிவன். ஆர்ந்த சுடர் - அருமையான ஒளிக் கிரணங்கள்.

கலவைச்சாந்து வீசுகின்ற கத்தூரி மணம்போல ஆயிரம் நாமமும் சிவஒளி வீசும் என்பதாம். 34

35 ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே.

குறிப்புரை :- ஆற்றுகிலா வழி - பிறர் படைக்காத சன் மார்க்கம். மேல்திசை - ஊர்த்துவ முகம்; அஃதாவது ஈசானன் கிழக்குத் திசை எட்டு - அஷ்ட தள கமலம்.

புகழ்வோர்க்கு மேனோக்கிய சகஸ்ரதளம் அமைந்து மத்தியில் ஈசான மூர்த்தி வெளிப்படுவர் என்க. அப்படி யாட்டவு மாமே - அவ்வாறு நடத்தலுமாம். 35

36 அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினல்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

குறிப்புரை :- வள்ளல் - வரையாது வழங்குபவன். ஊழி முதல்வன் - சங்காரக் கடவுள். பரிசு - வகை. 36

37 நானும்நின் றேத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் தானொக்கு மேனியன்
வானில்நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே.

குறிப்புரை :- ஆர்மதி - கலைகள் நிறைந்த சந்திரன். உயிர்க்கின்ற ஆறு - பிராண ரூபமாய் அருளும் மார்க்கம். உடம்பில் சந்திர கலை பிரகாசித்தற்குரிய இடம் சகஸ்ரதளம் என்க. 37

38 பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிறவா உரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே.

குறிப்புரை :- பிதற்றுதல் - இடைவிடாது பேசுதல். பெருமைத் தவன் நானே - பெரிய தவம் செய்தவன் நானே.

இடைவிடாது புகழ்தலினாலே பெருந்தவம் உடையேன் என்று வியந்தவாறு. 38

39 வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெருமான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ் செய்தீசன் அருள்பெற லாமே.

குறிப்புரை :- தீர்த்தம் - ஆகாயகங்கை. ஆத்தம் செய்து - நேசம் செய்து.

மனத்துள் சோதி அமைய நீரில் குளித்தது போன்ற உணர்வு உண்டாம் என்பதாம். 39

40 குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடம் செய்யாத வாய்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்வான் புகுந்துநின் றானே.

குறிப்புரை :- நாடும் வினைமுற்று. நிறைந்து அடை - ஒலியால் நிறைந்து (ஸ்பந்தம் மிகுத்து) அடைகின்ற. வணங்கி அடைந்தார்க்கு ஸ்பந்தமாயும், ஒளியாயும் தோன்றுவான் என்க. மறைந்து அடம் செய்யாது - வஞ்சனை செய்யாது. புறம் சடம்செய்வான் - உடம்பைப் புறம் என்று உணர்த்துவான்.

வஞ்சனையின்றி வாழ்த்தவல்லார்க்கு உடம்பினின்றும் பிரித்தறியும் ஆற்றலை அருளுவான் என்பதாம்.

41 சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை *போற்றவல் லார்க்குக்
கனஞ்செய்த வாள்நுதல் பாகனும் ஆங்கே
இனஞ்செய்த மான்போல் இணங்கிநின் றானே.

குறிப்புரை :- நஞ்சுண்டல் - விந்து ஜெயம். தேவர்பிரான் - சதாசிவமூர்த்தி. புனம் செய்த - திருத்தப்பட்ட. கனம் - கானம், நாதம். இனம் செய்த மான் - இனத்தோடு கூடிய மானைப் போல.

வாள்நுதல் பாகன் விந்துநாதமாகப் பொருந்தி நின்றான் என்பதாம். 41

---

*பாடபேதம்; 1. லார்க்குற் பனஞ்செய்த்.

42 போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயகன் னான்முடி செய்ததுவே நல்கும்
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே.

குறிப்புரை :- நான்முடி - பிரமன், சுவாதிட்டானச் சக்கரத்தில் இருப்பவன். நாயகன் நான்முடியாகச் செய்தது (சிரத்தைக் கிள்ளியது) விருப்பத்தை நீக்கியதைக் குறிக்கும் என்க. மாயகம் - மயக்குகின்ற உலகம். வேயனதோளி - உமாதேவி. ஒன்றும் - பொருந்தும். 42

43 அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே.

குறிப்புரை :- உரனடி செய்து - ஞானத்தை நிலைக்கும்படி செய்து. நிரனடி செய்து - செம்மைசெய்து.

சிவனது திருவடி ஞானத்தில் ஒடுங்கியிருப்பார்க்குப் பூர்ணத்துவம் அருளுவான் என்பதாம். 43

44 போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே.

குறிப்புரை :- சுழுமுனை நாடியில் விளங்கும் ஏகபாத சிவன். தேவர் முதலியோர் அன்பின்றி வழிபட்டனர் என்ற குறிப்பைக் காண்க. அன்புள் - அன்பகத்துள். பொலிய - விளங்க.

சிவனது திருவடியை அன்போடு வணங்க வேண்டும் என்பதாம். 44

45 விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி * நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே.

குறிப்புரை :- விதிவழி - நியதிவழி. விருத்தம் - விரோதம், இன்பமும் விதிவழிக்கு விரோதமின்று என்க.

துதிவழி — தோத்தரிக்கும் வழி. பதிவழி - முத்திவழி. பகலவன் - ஞாயிறு. 45

---

* பாடபேதம் : 1. நிற்றலுஞ். (தொடரும்)

# அருணகிரியார் செய்த அலங்காரம்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.

( மலர் 29, இதழ் 2. பக்கம் 115 இன் தொடர்ச்சி )

## மாயமான் வேட்டை ஏன் ?

செல்வம் நிலையாதென்ற உண்மையை உணர்ந்து தெளிந்தால் இந்த 'மாயமான் வேட்டை' ஒழிவதாகும் என்பது இவர் கருத்து. அலங்காரத்திற் பல பகுதிகள் இதனை உணர்த்துகின்றன என்று கூறலாம். 'தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம் நீரிற் பொறி' (49) என்கின்றது ஒரு பாடல். 'பாதகத்தால் தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்து இளைத்து வாடிக்கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே' (53) என்கின்றது பிறிதொன்று. 'நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை; நில்லாது செல்வம்; பார்க்குமிடத்து அந்த மின்போலும்' (66) என்று அறிவுறுத்துகின்றது மற்றொன்று. "காலன் உமைக் கொண்டுபோம் அன்று, பூண்பனவும், தார்கொண்ட மாதரும் மாளிகையும் பணச்சாளிகையும், ஆர்கொண்டு போவர், ஐயோ கெடுவிர். நும் அறிவின்மையே" (78) என்று நம்பொருட்டுக் கண்ணீர் வடிக்கின்றது மற்றொரு கவிதை.

## பற்று அறுதல் :

யாக்கை, செல்வம் முதலியன நிலையா என்று உணர்ந்து தெளிதல் வேண்டும். அத்தெளிவே அகப்பற்று புறப்பற்றுக்களை, யான் எனது என்ற மாசுகளை ஒட்டும். அவ்விரண்டும் கெட்டாலன்றிச் செவ்வேற் பிரான் அருள் முன்னே தோன்றாது என்னும் இக்கவிஞர் 'சத்தியம்' செய்தும் அதனை நிறுவுகின்றார்.

" யான்றா னெனுஞ்சொல் லிரண்டும்
கெட்டாலன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம் "

தன்னை ஒரு பொருளாக எண்ணாது, எல்லாம்வல்ல பரம்பொருளின் உடைமையாகிய அடிமை தான் என்ற உணர்வு தலைப்பட்டால் அன்றி இறைவனின் இன்னருள் கிட்டாது என்று விளக்குவதே இவ்வித்தகர் திருவுள்ளம். இவ்வாறு இன்னருள் பெற்றார்க்கு அழிவும் உண்டோ என்று கேட்கின்றார் இவர். "எமராசன் விட்ட கடையேடு வந்து இனி என்செயுமே" (87) என்பது அக்கேள்வி. "வாராது அகல், அந்தகா! வந்தபோது உயிர் வாங்குவனே" (81) என்றும், "உனைப் பாரறிய வெட்டிப் புறங்கண்டலாது விடேன்" (64) என்றும், "திண்டாட வெட்டி விழவிடுவேன்" (25) என்றும் காலனையே நேரிற் கேட்கும் உரத்தை இவரது அலங்காரம் இவர்க்குத் தந்துவிடுகின்றது.

### ஒன்றும் நிலை :

காலனுக்குங்கலங்காத பேருரம் பெற்ற அருணகிரியார்க்கு அலங்காரம் 'பேசா அநுபூதி'யினையும் தந்துவிடுகின்றது. 'கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன எந்தை' என்று தாயுமானாரும் வியந்து வாழ்த்திய அநுபூதிச் செல்வரன்றோ இவ்வருளாளர்!

"மௌனத்தை யுற்று
நின்னை உணர்ந் துணர்ந் தெல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந் தேன்இறந்
தேவிட்ட திவ்வுடம்பே" (19)

என்ற பகுதியே இதற்குச் சான்றாம். ஆம்; மௌன நிலை பெற்று, முருகனை உணர்ந்து உணர்ந்து குணமற்ற நிலைக்குச் சென்று தம்மையே மறந்து கலந்து ஒன்றாய் நின்ற நிலையே இது. "அல்லும் பகலும் இல்லாச் சூதான தற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா யிருக்கப் போதாய் மனமே" (17) என்று புறப்பட்டார். செவ்வேளுக்குச் செய்த அலங்காரத்தில் தாமும் உருகி ஒன்றானார். அங்கே அவர் கண்ட காட்சிதான் யாது?

"பத்தித் திருமுகம் ஆறுடன்
பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
டேன்; செயல்மாண்டடங்க" (47)

என்கின்றார். அதன் பிற்பகுதியிலே தாம் விழ்ந்து அழுந்திய அந்தப் பேரின்பப் பெருங்கடலைப் பாடுகின்றார்;

"புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுரளும்பர
மானந்த சாகரத்தே" (47)

இதுவே அவர் விழ்ந்து இன்புறும் 'பரமானந்தப் பழங்கடல்'. அப்பேறே, "பஞ்சபூதமும் அற்று, உரை அற்று, உணர்வு அற்று, உடல் அற்று, உயிர் அற்று, உபாயம் அற்றுக், கரை அற்று, இருள் அற்று எனது அற்றிருக்கும் அக் காட்சியதே" (61) என்று அவரால் விளக்கமாகப் பின்னும் கூறப்பெற்றுள்ளது. இந்தப் பேற்றை எப்படி எடுத்துக் கூறியும் முற்றச் சொல்லியதாக இவர்க்கு முடியவில்லை; மன நிறைவில்லை. "சொல்லுகைக் கில்லையென்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும் எல்லையுட் செல்ல எனைவிட்டவா!" (10) என்பார் இவர்.

## ஆன்ம விடுதலைப் பேறு :

தம்மை மறந்து தண்டமிழின் செய்யுட்களால், இவ்வாறெல்லாம் கந்தனுக்கு அலங்காரம் செய்த இந்தத் தெய்வப்புலவர் அந்த அலங்காரத்தின் முடிவிலே பெற்ற அற்புதப் பேற்றினை எடுத்தோதி மகிழ்கின்றார். இந்தத் தமிழலங்காரத்தால், "என் பிறவி யற்றது; உடல் என்னும் பொல்லாச் சிறையினின்றும் விடுபட்டேன் யான்; இந்த ஆன்ம விடுதலை மட்டுமோ? பாசமாகிய வினை என்னை விலங்காகக் கட்டிக்கொண்டு துயர்ப்படுத்தியிருந்ததே: அந்த விலங்கும் உடைபட்டது. என்னே யான் பெற்றபேறு" என்று களித்துக் கலந்ததொர் காதற் கசிவுடன் அலங்காரத்தை முடித்துக் கண்மூடிக் கரங்குவித்து நிற்கின்றார்;

"பிறவியற இச்சிறை விடுதலைப்பட்டது; விட்டது
பாச வினை விலங்கே" (100)

எத்துணையோ அலங்காரங்கள் உலகில் உள்ளன. ஆனல் செந்தமிழால் கடவுளுக்கு அலங்காரம் செய்து, அந்த அற்புதமான பேரழகுக்கு அழகு செய்யும் பெருமை அருணகிரியார்க்கே வாய்த்துள்ளது. அதனல் அவர் பெற்ற பெரும் பேறுகள் ஆன்ம விடுதலை என்றால், அதனைப் பெற முயலும் உயிர்க்குலங்கட்கு அந்தக் 'கந்தர் அலங்காரமே' நற்றுணை புரியும் என்று கூறுதலும் வேண்டுமோ? செவ்வேளருளைப் பெற்றுச் சிறந்து வாழ்ந்திடக் கந்தர் அலங்காரம் நல்ல வழிகாட்டி.

# நிலை வேறுபாடுகள்

**வித்துவான். திரு. சு. சாமிஐயா, M. O. L.**

( மலர் 29, இதழ் 2. பக்கம் 111 இன் தொடர்ச்சி )

நுதலினின்றும் கீழ் இறங்கும் ஆன்மா நுதலில் விட்டுச் செல்வன :- ஞானேந்திரம் 5, கன்மேந்திரியம் 5, ஆக 10 கருவிகள். கண்டத்தில் விடப்பெறுங் கருவிகள் தன்மாத்திரை 5, அந்தக்கரணங்கள் 3, வளிநிலை 9, வசனாதி 5, ஆக 22 கருவிகளாகும். இதயத்தில் விடப்பெறுவது சித்தம் ஒன்றுமே ஆகும். அதுபோலவே உந்தியில் பிராணன் அல்லது உயிர் வளி மட்டுமே விடப்பெறுகின்றது.

" சாக்கிர முப்பத் தைந்து நுதலினிற், கனவு தன்னி
லாக்கிய விருபத் தைந்து களத்தினிற், சுழுனை மூன்று
நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி ரண்டு நாபி,
நோக்கிய துரியா தீத நுவலின்மூ லத்தி னென்றே "

என்ற சித்தியார் செய்யுளாலும் ;

" முப்பதோ டைந்தாய் முதல்விட்டங் கையைந்தாய்ச்
செப்பதின் மூன்றாய்த் திகழ்ந்திரண் டொன்றதா
யிப்பதி நின்ற வியல்பை யறிந்தவ
ரப்பதி கொள்பவ ராய்ந்து கொள்ளிரே "

என்ற திருமந்திரத்தாலும் ;

" எண்ணவொன் றிலாத தீதம் எய்திய துரியத் தொன்று
நண்ணிடும் சுழுத்தி தன்னில் நயந்துள தொன்று பின்னும்
அண்ணிடுங் கனவு தன்னில் ஆறேழாம் சாக்கி ரத்திற்
கண்ணுறும் அஞ்சா றுய கருவிகள் மருவுந் தானே "

என்ற சிவப்பிரகாசத்தாலும் கண்டுணரலாம்.

உலாச் சென்ற அரசன், உலா வருங்கால் பல்வகைப் படையோடும், அதிகாரிகள் புடைசூழவும் வருவது போன்றது. முப்பத்தைந்து கருவிகளுடன் ஆன்மா நுதலிடை நிற்கும் நனவு நிலையாகும். பின்னர் அரண்மனை புகும் நிலையில் வாயில்

தோறும் படிப்படியே காவலர்களை நிறுத்திச்சென்று அந்தப் புரத்தில் உட்சென்று மனைவியுடன் கூடுவது போன்று ஆன்மா முறையே கருவிகளை விடுத்து மூலாதாரத்தில் சென்று ஒடுங்கு கின்றது என்பதை,

" படைகொடு பவனிபோதும் பார்மன்னன் புகும்போ தில்லிற்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்ன
ரடைதருந் தனியே யந்தப் புரத்தினி லதுபோ லான்மா
வுடலினி லஞ்ச வத்தை யுறுமுயிர் காவலாக"

சித்தியார் உருவகித்து உரைக்கின்றது. இவ்வாறு கீழ்ச்சென்று ஒடுங்கும் முறையும் அவ்வாறே மேலெழுந்து விரியும் முறை ஆகிய இரண்டும் கீழாலவத்தை எனப்படும்.

கீழ்ச்சென்று ஒடுங்கும் வகையில் ஆன்மா கன்மத்தை சேகரிக் கின்றது. அத்துடன் பிறவிக்கு வித்தாகின்றது. மேற்சென்று தோன்றுமுறையால் கன்மநுகர்ச்சிக்கும் பிறவியை அறுத்தற்கும் ஏதுவாகின்றது. இதனை,

" இருவகை சாக்கி ராதி யவத்தைக ளியல்பு தானு
மொருவகை கீழே நூக்கி யுற்பவங் காட்டு மொன்று
பெருகமே னேக்கித் தீய பிறப்பறுத் திடுமி யோகிற்
றருவதோர் சமாதி தானுந் தாழ்ந்துபின் சனனஞ் சாரும்"

என்ற சித்தியார் செய்யுள் அழகுறக் கூறுகின்றது.

அடுத்து, மத்தியாலவத்தையினை நோக்குவோமானால், இதனைப்பற்றி நூல்கள் குறிப்பிடுங்கால் வேறுவேறு பெயர் களால் குறித்துள்ளன. இதனை மத்தியாலவத்தை என ஞான மிர்தமும், நிலையிற்படுமவத்தை என சிவப்பிரகாசமும், குறித் துள்ளன. நுதல் தொடக்கமாகக் கொண்டு நிகழும் இந்நிலை யும் ஐவகைப்படும். அது, சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில் சொப்பனம், சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கி ரத்திற் றுரியாதீதம் என முறையே பெயர்பெறும்.

சாக்கிரத்தில் சாக்கிரம் என்பது ஆன்மா தத்துவதாத்துவி கங்களோடு கூடி விடயங்களை அனுபவிக்கும் அவசரம். சாக்கிரத் தில் சொப்பனம் ஆன்மா சித்தத்துடனும் பிராணவாயுவுடனுங் கூடி அறிவுணர்ச்சி முதலியன தெளிவின்றி நிகழும் அவசரம். சாக்கிரத்தில் சுழுத்தி என்பது ஆன்மா சித்தத்துடனும் பிராண வாயுவுடனுங்கூடி அறிவுணர்ச்சி அடங்கிநிற்கும் அவசரம்.

சாக்கிரத்திற் றுரியமாவது ஆன்மா சித்தமழிந்து பிராணவாயு சிறிதே இயங்கி நிற்கும் அவசரம். சாக்கிரத்துரியாதீதம் என்பது ஆன்மா விடயங்களை யனுபவிக்கிற வேளையில் பிராண வாயுவும் இயங்காமல் ஒன்றையும் அறியாமல் மூர்ச்சித்து நிற்கும் அவசரமாம்.

இந்நிலைகளை நாம் நாட்டு வாழ்க்கையில், மின் விசிறியை இயக்கச் சென்றவன் மின்சாரம் தாக்குண்ட அளவில் திகைத்து மூச்சும் விடாமல் நிற்கின்றான் என்றால் அதுவே சாக்கிர துரியா தீதம் எனப்படும். சற்று தெளிந்து யார் நம்மை அடித்தவர் எனத் திரும்பி நோக்குகின்றான் என வைத்துக்கொள்வோம் அதுவே சாக்கிர துரியம் எனப்படும். யாரும் தன்னை அடிக்க வில்லை மின்சாரம் தாக்குண்டோம் என நினையும் நிலையே சாக்கிர சுழுத்தி ஆகும். விசிறியை இயக்கவந்த இடத்தில் இவ்வாறு நேர்ந்தது என அடுத்த நிலையில் நினைப்பது சாக்கி ரத்தில் சொப்பனமாகவும், மீண்டு, அந்த விசிறியை இயக்கிச் சென்று அமர்தல் சாக்கிரத்தில் சாக்கிரமாகவும் கொள்ளலாம். நெருங்கிய உறவினரின் மரணத்தைத் திடீரெனத் தந்தி வாயி லாகப் பார்க்கும் நிலையில் மூர்ச்சித்து நிற்கும் நிலை, பின்னர் தெளிந்து அதனை இல்லில் இருப்போர்க்குத் தெரிவிக்கும் நிலை அதன்பின்னர் ஊர்க்குச்செல்லவேண்டும் என்பனவாக வரும் பல நிலைகளையும். மேற்கூறிய முறையில் முறையே ஒப்பிடலாம்.

" அறிதரு முதல வத்தை யடைதரு மிடத்தே யைந்துஞ்
செறிதருங் கரணந் தன்னிற் செயன்றெழுங் கண்டு
சொன்னி'',

எனச் சித்தியாரும்,

" இவ்வகை யவத்தை தன்னி லெய்திடுங் கரணமெல்லாம்
மெய்வகை யிடத்திலுற்று மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம கற்றப் புரிந்திடி லருளா லாங்கே
ஐவகை யவத்தை யுய்க்கு மறிவினு லறிந்துகொள்ளே ''

எனச் சிவப்பிரகாசமும் உணர்த்தும்பொழுது இவ்வகைநிலைகளை ஆசிரியன் அறிவிக்க அறியும் நிலை இவை எனுங் கருத்துப்படக் கூறியுள்ளன.

இவற்றுக்குச் சிவதத்துவங்கள் ஐந்தும் கருவியாகின்றன. அவை சிவம், சத்தி, ஈசுரம், சாதாக்கியம், சுத்த வித்தை என்பன வாம். சாக்கிரசாக்கிரத்தில் கலாதி முதலியவற்றைச் செலுத்தி

நிற்கும் கருவிகள் சிவம், சத்தி, ஈசுரம், சாதாக்கியம், சுத்த வித்தை என்ற ஐந்துமாம். சாக்கிர சொப்பனத்தில் சிவம், சத்தி, ஈசுரம், சாதாக்கியம் ஆகிய நான்கு கருவிகள் கலாதிகளைச் செலுத்தி நிற்கும். சாக்கிர சுழுத்தியில், சிவம், சத்தி, ஈசுரம் ஆகிய மூன்றும் கலாதிகளைச் செலுத்தி நிற்கும். சாக்கிர துரியத்தில் சிவம் சத்தி ஆகிய இரண்டும் கலாதிகளைச் செலுத்தி நிற்கும். சாக்கிர துரியாதீதத்தில் சிவம் ஒன்றே கலாதிகளைச் செலுத்தி நிற்கும். என்பதை,

'' ஐந்துசாக் கிரத்தி னான்கு கனவினிற் சுழுனை மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கிராதி யவத்தைக டானந் தோறு
முந்திடுங் கரணந் தன்னிற் செயறேறு முணர்ந்துகொள்ளே''

என அருணந்தி சிவாசாரியார் அருளிச் செய்கின்றார். இதனைச் சிவஞான போதத்தில்,

'' இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய உள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து — மிலாடத்தே.
யவ்வவ விந்திரியத் தத்துறைகல் கண்டதுவே
யவ்வவற்றின் நீங்கலது வாங்கு ''

கூறிய வெண்பாவால் அறியலாகும். இந்நிலையிற்படும் அவத்தை அல்லது மத்தியாலவத்தை கொண்டே கீழாலவத்தை அறியப்படும் என்பதனையும், இந்நிலையிற்படும் அவத்தையில் கருவிகள் நீங்குவதே சுத்தாவத்தை எனப்படும் என்பதும் காட்டிய பாடல்களால் உணரக்கிடந்த கருத்தாகும்.

இனி சுத்தாவத்தை அல்லது நின்மலாவத்தையினைப் பார்ப்போம். இது நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம் நின்மல சுழுத்தி. நின்மல துரியாதீதம் என ஐந்து வகைப்படும். இவை இதயம் முதல் பிரமரந்திரம் வரையும் முறையே நிற்கும். இதனை மேலாலவத்தை என்றும் நூல்கள் குறிப்பிடுகின்றன. இறையருள் பெற்றார் எய்தும் நிலைகளே இவை என்பதை நூல்கள் பரக்கப் பேசுகின்றன. திருமந்திரம் எட்டாம் தந்திரத்தில் 'நின்மலாவத்தை' என்ற தலைப்பில் ஒன்பது மந்திரங்களால் இவை விளக்கப்பட்டுள்ளன.

மலமற்ற நிலையிற் கூறப்படும் நின்மல சாக்கிரத்தில் இருவினை ஒப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் நிரம்பி நிற்கும்.

மத்தியாலவத்தையிற் கூறப்பட்ட சிவதத்துவம் ஐந்தில் ஈருகச் சொல்லப்பட்ட சுத்தவித்தை நீங்கிய நிலையாகும். நின்மல சொப்பனம் என்பது குருதரிசனம் ஆகி அருளுபதேசம் பெற்று சுத்த வித்தையும் ஈசுரமும் நீங்கி நிற்கும் நிலையாகும். நின்மல சுழுத்தியாவது உபதேசத்தில் உறைத்து நின்று சாதித்துச் சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் என மூன்றும் நீங்கிய நிலையாகும். நின்மலதுரியம் என்பது பாசநீக்கம் பெற்றுச் சிவ தத்துவத்தில், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை ஆகிய நான்கும் நீங்கிய நிலையாகும். நின்மலதுரியாதீதமாவது சிவப் பேறெய்தி ஐந்தும் நீங்கிய நிலையாகும்.

நின்மலாவத்தைகளின் முறையான இலக்கணங்களையும் பயன்களையும் திருமந்திரம் விரித்துணர்த்துகின்றது. நின் மலாவத்தை எய்திய உயிர்களின் உள்ளத்தில்,

" நெருப்புண்டு நீருண்டு வாயுவு முண்டங்
கருக்கனுஞ் சோமனு மங்கே யமருந்
திருத்தக்க மாலுந் திசைமுகன் ருனும்
உருத்திர சோதியு முள்ளத் துளரே "

அட்ட மூர்த்திகளும் உண்டு என்று திருமந்திரம் தெரிவிக் கின்றது.

காரியாவத்தைகளுள் கூறப்பெற்ற நிலைபோலவே காரணு வத்தைகள் காணைப்பெறும் என்று எடுத்துக் காட்டுதற்காகவே இவை விளக்கப்பெற்றன எனச்சிவப்பிரகாரம் கூறுகின்றது. துரியாதீதத்தில் ஆன்மா ஆணவமலத்தால் மறைப்புண்டு மூலா தாரத்திலே கிடக்கின்ற நிலைபோன்றது கேவலம் ஆகும். சாக்கிரத்தில் முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடிநின்ற நிலை போன்றது ஆன்மா உடல் அறிவு முதலிய பெற்ற சகல நிலை யாகும். சாக்கிர அதீத்தில் நிற்கும் நிலைபோலக் கேவலம் சகலம் இரண்டினும் நீங்கிய சுத்த நிலையாகும் என்றும் கூறு கின்றது

" நீக்கமி லதீத மாசு நிறைந்தகே வலமா நீர்மை
சாக்கிரங் கலாதி சேர்ந்த சகலமாந் தன்மை யாகும்
நீக்கிமி விரண்டுங் கூடா தொழியவோர் நிலையி னீடுஞ்
சாக்கிர வதீதஞ் சுத்தத் தகைமைய தாகுந் தானே "

என்ற சிவப் பிரகாசத்தால் இனிதுணரலாம்.

# வீரசோழியம்

டாக்டர் செ. வை. சண்முகம் M. A., M. Litt, Phd.

( மலர் 29, இதழ் 2, பக்கம் 92 இன் தொடர்ச்சி )

திணை பால் காட்டும் விகுதிகள் முதல் வேற்றுமையின் உருபுகளாகக் கூறப்பட்டுள்ளது. வடமொழிச் செல்வாக்கினுலே யாகும்.

வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனரும் ஓரிடத்தில் 'தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகித் திகழுகின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்' என்று கூறியுள்ளமையும் அறியத்தக்கது. இக்கருத்து அக்காலத்தில் சில தமிழ் அறிஞர்களிடையே பரவி இருந்திருக்கவேண்டும். யாப்பருங்கல விருத்தியாசிரியர் அத்தகைய தமிழாசிரியர்களை 'வடநூல் வழித்தமிழாசிரியர்' என்று குறிப்பது அக்கருத்தை வலியுறுத்தும்.

தாதுப்படலம்தான் பவணந்தியாரின் பதவியலுக்கு முன்னேடி. பதவியல் நன்னூலின் ஒரு சிறப்பு அங்கமாகக் கருதப்படுவதால் இதற்கு வித்திட்ட முறையில் தாதுப்படலம் பாராட்டுக்குரியதே, தொல்காப்பியர் காலத்திற்குத் தமிழில் பிறமொழிச் சொற்கள் நிறையவந்து வழங்கலாயின. எனவே, அச்சொற்கள் தமிழில் வந்து வழங்கும் முறையை விரிவாக ஆராய்தலும் இலக்கண ஆசிரியர்களின் கடமையாயிற்று. எனவே பெருந்தேவனர் மூன்று நூற்பாக்களில் (57, 58, 59) விரிவாக ஆராய்ந்தது பாராட்டுக்குரியதே. அவற்றையொட்டி பிற்கால இலக்கண ஆசிரியர் வடமொழியாக்கம் பற்றித் தங்கள் இலக்கணங்களில் விளக்குவதால் அதன் சிறப்பு மேலும் விளங்குகிறது.

## 3. வீரசோழியம் கூறும் திருத்தம் :

3. 1. தொல்காப்பியர் எழுத்தின் பிறப்பைப்பற்றிக் கூறுமிடத்து கொப்பூழ் அடியாக மேலே கிளர்கின்ற காற்று 'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைபெற்று' அம்மூன்றுடன் 'பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும்' என ஐந்து

உறுப்புடன் (தொல். 83) பொருந்துமென விளக்கியுள்ளார். மிடறு, நெஞ்சு போல்வன காற்று வருமிடங்கள் (Resenators) என்று அழைக்கப்பெறும். மூக்கும் காற்று வருமிடமாக ஒலியியலார் (Phoneticion) கருதுகின்றனர். அவ்வாறே வீரசோழிய ஆசிரியர் 'உரமும் சிரமும் மந்த மலி கண்டமும் மூக்கும் உற்று' (6) என்று தொல்காப்பியர் கூறிய முதல் வகையோடு மூக்கையும் சேர்த்துக் கூறியுள்ளது சிறப்புடையது. நன்னூலாரும் வீரசோழியத்தைப் பின்பற்றி 'உரம் கண்டம் உச்சிமூக்கு உற்று' (74) என்று கூறியுள்ளமையும் இக்கருத்தை வலியுறுத்தும்.

3. 2. தொல்காப்பியர் பெயரியலில் 'யான் யாம் நாம் என வரூஉம். பெயரும் பால் அறிவந்த உயர்திணைப் பெயரே (பெயரியல் 8) என்றும், அவ்வாறே வினையியலில் தன்மை வினைமுற்றை உயர்திணைக்குரியன என்றும் கூறியுள்ளார். ஆயினும் முன்னிலை வியங்கோள் போன்றவற்றை இருதிணைக்கும் ஒரன்ன உரிமையவாக (வினையியல் 25) குறிப்பிட்டுள்ளார்.

தன்மை முன்னிலையைப் போலவே பால்வேறுபாடின்றி இடவேறுபாடும் எண்வேறுபாடும் உடையது. எனவே பெருந்தேவனார் படர்க்கை விகுதியைச் சேர்த்தும் கூறியுள்ளார். அவர் கருத்துப்படி படர்க்கை ஆண்பால், பெண்பால் சிறப்பு (Honorific), ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஆறுவித வினை விகுதிகளையும் தன்மையும் முன்னிலையும் ஒருமை, சிறப்பு, பான்மை ஆகிய மூன்றுவித வினைவிகுதிகளையும் கொண்டுள்ளன. எனவே இலக்கண முறைப்படி தன்மை விரவுப் பெயராகவும் விரவு வினையாகவும் கருதப்படவேண்டும். அதனுல்தான் பவணந்தியாரும் 'தன்மை நான்கு முன்னிலை ஐந்தும்............ பொதுப்பெயர் (281) என்று பெயர் இயலிலும் 'தன்மை முன்னிலை.................. இருதிணைப் பொதுவினை' என்று (329) வினையியலிலும் கூறியுள்ளார்.

3 3. தொல்காப்பியர் ஏவல்பற்றித் தனியே பேசாவிடினும் எழுத்ததிகாரத்தில் இரண்டு இடங்களில் குறித்துள்ளார்.

ஏவல் குறித்த வுரை யசைமியா (224. 3)

ஏவல் கண்ணிய வியங்கோள் (210. 4) என்பன அவை.

மேலும் வினையியலில் ஏவலுக்குரிய வினை விகுதியும் முன்னிலைக்குரிய விகுதியோடு சேர்த்தே கூறுகிருர். சான்ருக

'இர் ஈர் மின் எனவரூஉம் மூன்றும்' (வினையியல்:27) முன்னிலை வினை விகுதி என்பார். இவற்றுள் இர், ஈர் இரண்டும் முன்னிலைக்குரியன. மின் ஏவலுக்குரியது.

ஏவல். முன்னிலை. வியங்கோள் ஆகிய மூன்றும் உறுப்பாலும் (Forms) பயனுலும் (function) வெவ்வேறு வகையானவை. ஏவல் (Inperative) முன்னிலைக்கு மட்டுமே உரியதாய் ஒருமை பன்மை என்ற இருவேறு பாகுபாடு மட்டும் காட்டும். முன்னிலை (2nd person indidative) என்பது காலத்தையும் திணையின் வேறுபாட்டையும் காட்டும். வியங்கோள் எண்ணும் காட்டாது; திணை பாலும் காட்டாது. அது தொல்காப்பியக் கருத்துப்படி படர்க்கை உரியதாயும் பிற்கால இலக்கண நூல்களின் கருத்துப்படி மூவிடத்திற்கும் உரியதாயும் வரும்.

பெருந்தேவனுர் ஏவலுக்குரிய விகுதியை தனியே 79 ஆம் நூற்பாவிலும் அடிச்சொல்லே ஏவல் ஒருமையாக வரும் என்பதை 60 ஆம் நூற்பாவிலும் கூறியுள்ளார்.

பவணந்தியாரும் முன்னிலை விகுதிகளையும் ஏவல் விகுதிகளையும் ஒரே நூற்பாவில் கூறியிருப்பினும் அவற்றைப் பிரித்துக் காட்டியிருப்பதைக் கொண்டும் வேறு சில நூற்பாக்களில் தனித்துப் பேசியிருப்பதாலும் முன்னிலையும் ஏவலும் வேருகக் கருதியுள்ளார் எனலாம்.

ஆய் இகரம் ஈற்ற மூன்றும்
ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும் (334)

இர் ஈர் ஈற்ற இரண்டும் இருதிணை
பன்மை முன்னிலை. மின் அவற்று ஏவல் (336)

என்ற நன்னூல் நூற்பாக்கள் இக்கருத்தை விளக்கும். மேலும் உயிர் ஈற்றுப் புணரியலில்.

ஆவி ய ர ழ இறுதி முன்னிலை வினை
ஏவல் முன்.................... (160) என்றும்,

மெய்யீற்றுப் புணரியனில்

ஞ ண ந ம ல வ ள ன வொற்றிறு தொழிற்பெயர்
ஏவல் வினை....................... (206)

என்றும் குறிப்பிட்டுள்ளமையும் கருதத்தக்கது.

MAHAMAHOPADHYAYA

3.4. ஏழாம் வேற்றுமை உருபாக பெருந்தேவனார் வயின் (35) என்பதையும் சொல்லியுள்ளார். தொல்காப்பியரே வயின்' என்பதை இடப்பொருளில் கையாண்டுள்ளதால் பழந்தமிழுக்கும் வயின் என்பதை ஏழாம் வேற்றுமையாகக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| தொன்னெறி மொழிவயின் ஆஅகு நவும் | 932 |
| அவ்வயின் வினையும் அவ்வயின் நிலையும் | 911 |
| எருத்துவயின் திரியும் | 891 |
| தொகைவயின் பிரிந்து | 569 |
| பொருள்வயின் | 514 |
| செருவயின் கெடும் | 260 |

எனவே இதுவும் மொழியமைப்பு விளக்குவதில் வீரசோழியம் கூறிய திருத்தமாகக் கொள்ளவேண்டும்.

இக்கருத்துக்கள் வீரசோழிய ஆசிரியர் தமிழ் அமைப்பை விளக்குவதில் சில திருத்தங்கள் கூறியுள்ளார் என்பதைத் தெளிவுபடுத்தும். இவை அனைவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய திருத்தம் ஆனதால் நன்னூலாரும் பின்பற்றியுள்ளார். இவை மொழியாராய்ச்சியின் வளர்ச்சியைக் காட்டுவதாக அமைகின்றன.

(தொடரும்)


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

**வித்துவான். திருமதி. ப. நீலா**

(மலர் 29, இதழ் 2, பக்கம் 119ன் தொடர்ச்சி)

## 26. மாபாதகம் தீர்த்தது

வேதநாயகன் வெம்பழியஞ்சிய ஆடலுக்குப் பிறகு மாபாதகம் தீர்த்த வரலாற்றை இங்குக் காண்போம். குலோத்துங்கன் திரைதழுவும் தரையில் தனிச்செங்கோல் செலுத்துங் காலத்தில் அவந்தியென்ற நகரில் அந்தணனொருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வாய்த்த மனைவியோ ரதியும் திருமகளுங் காமுறுமளவு எழில்வடிவுகொண்டவள். கொல்லிப் பாவையென விளங்கின அவளிடம் பாவங்களெல்லாம் உருக்கொண்டது போல ஒருமகன் தோன்றினன். கொலை, களவு, காமம் போன்ற பாவங்களின் கொள்கலனென நாளும் வளர்கின்றான்.

**காமத்தால் கெட்டான் :**

காளைப் பருவமடைந்த அப் பாவிமேல் கோடி கோடி சிலைபூட்டி கோடி கோடி கணை தொடுத்து கோடி கோடி மன்மதர்கள் எய்தார்கள் போலும். அவன் மனம் காமத்தால் திரிபுற்றது. இளமைச் செவ்விய யாக்கையன்; அதோடு வளமைக் காமமும் வல்வினையும் சேர்ந்து நிறை என்ற தளையைத் தகர்க்கவே தன்னை வயிற்றிடை விளைவித்து ஈன்ற வள் தன்னையே அவன் விரும்பினன்.

அன்னையென்ற அந்தக் கெடுமதியாளும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு காவலும் மறைய, அவனுக்கு உடன்பட்டாள். இன்பமோ சிறிது; இதில் வரும் துன்பமோ கரையில்லாத் தொடுகடல் என்பதனை எல்லாரும் அறியவோ என்னவோ அவன் இவ்வினை செய்யத் துணிந்தான்.

**தந்தையைக் கொன்றான் :**

மைந்தனின் மறைவான ஒழுக்கம் கேட்டும் வெளிக் காட்டாது அதனை மனத்தடக்கிக்கொண்டான் தந்தை. பிறி தொரு சமயம் நேராக அவ்வஞ்சகனின் செயலைப் பார்த்து விட்டான். கோபங்கொண்ட மைந்தன் ஐம்பெருங் குரவருள் (அரசன், ஆசிரியன், தந்தை, தமையன், குரு) தந்தையும் ஒருவன் என்று எண்ணாமல்; ஈன்றவள் தடுத்தும் கேளாமல் மண்தொடு படையால் (மண்வெட்டி) தகப்பனைத் துண்டாக்கி வீழ்த்தினான்.

இரவோடிரவாகத் தந்தையின் ஈமக்கடன்களை முடித்து விட்டுத் தாயுடனும் கைப்பொருளுடனும் ஊரைவிட்டு வெளி யேறினான். காட்டுவழியொன்றில் வரும்பொழுது கொடுஞ் சிலை வேடர்கள் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டு கைப் பொருளைப் பிடுங்கிக்கொண்டதோடு நில்லாமல் அக்காரிகை யையும் கைப்பற்றினார்கள். தொலைவில்சென்று துன்பமின்றி வாழலாம் என்றெண்ணிய அவனது எண்ணம் சிதைந்தது. அதை நோக்கும்போது நாமொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைக்கிறது என்பது எவ்வளவு உண்மை என்று புலப்படுகிறது.

**பாதகம் பற்றியது :**

பொருளையு மிழந்து தாயென்ற துணையையுமிழந்து தனியனாக இவன் நிற்கிறானே என்று இரங்கிய மாபாதகம் பிரம்மஹத்தி வடிவாய் வந்து பற்றினான். இப்போது-தானே துணை என்பான் போல அப்பாவியைப் பற்றிக்கொண்டான்.

“ தாதை தன்றனை யற்கினி யார்துணை
மாதர் யாயை மறவர்கைக் கொள்ளவிப்
போது தான்றுணை யென்பவன் போன்றுமா
பாத கத்துரு வாய்வந்து பற்றினான்.”

பற்றிய பாதகம் நிழல்போல் அவனைத் தொடர்ந்தும் நல்ல தீர்த்தம், சிவதலம், நல்லோர் பக்கம் அவனைச் சேரவொட் டாமல் தடுத்தும் வருத்துகிறது. அவனால் அரன் நாமத்தைச் சொல்லவும் கேட்கவும் முடியவில்லை. பலநாள் அதன் பிடியில்

சிக்கி அவதியுற்ற பார்ப்பனமகன் பாதகங் குறுகுநாளில் கூடல் மாநகரங் குறுகினன்.

### வேடனுன வேதநாயகன் :

கூடல் நாயகன் தன் குலதேவியோடு ஓர் வேட வடிவங் கொண்டான். தந்தக் குழையைக் காதுகளிலணிந்து, புலிப் பற்ருலி மார்பிலசைய உமாதேவி வேட்டுவச்சியாளுள், வேங் கையிணர்சூடி, முதுகில் வாளிப்புட்டிலோடு கலைமானின் வளைந்த கொம்பு போன்று காதளவோடிய மீசை தாடியுங் கொண்டு பார்ப்பனன் வரும் வழியிலமர்ந்து பெருமான் சூதாடிக் கொண்டிருக்கிருன்.

வேழமுண்ட கனிபோல் வறியனுகி வருகின்ற பாதகன் வரவுகண்டு பார்வதியிடம் சில கூறுகிருன் குமரன் தந்தை. ஒருவரும் உள்ளத்தாலும் நினைக்க முடியாத கொடிய பாவி இவன் என்று அன்னைக்கு அறிமுகம் செய்துவைத்தபின், கள் காமம் இவற்றின் கொடுமையை அறிவுறுத்துகிருர். கள்ளும் காமமும் தீங்கு பயப்பனவே என்ருலும், உண்டபோது மட்டுமே தீமைதரும் கள். காமமோ எண்ண, காண, கேட்க விடந்தலைக்கேறியதுபோல் அறிவையழிக்கும். கொலை, களவு, கள்ளுண்ணல் இவற்றின் காரணம் காமம்தான். காமமே நம்மை நரக பூமிக்குக் கொண்டு செலுத்தும் என்று மலைமக ளுக்கு ஈசன் விளக்கிக்கொண்டிருக்கும்போது அப்பார்ப்பன மகன் நெருங்கி வந்தான்.

கொலைப்பழி கோட்பட்டவன் குறுகலும், நாதன் 'ஏட நீ உழந்து சாம்பியழிவதேன்' — என்ன, பார்ப்பனன் பெருமான் அருட்பார்வையால் சிறிதே நல்லறிவு வரப்பெற்றவனுக 'பாவ முதிர்ச்சியால் தாயை மனைவியாகக் கொண்டேன். தந்தையைக் கொன்றேன்; அதனுல் பிடித்த பாவம் எங்கும் தொலையாமை யால் கூடல் பதியாகிய இங்கு புகுந்தேன்' என்ருன்.

### பாவமன்னிப்பு ஈந்தான் :

உன்பெயர் சொன்னவர் தம் மரபுடன் நரகில் விழும்படி யாக நீ செய்த பாவம் இங்கன்றி வேறு எங்கு நீங்கும். எமது அருணேக்கம் உன்மீதுபட்டதால் நீ உய்ந்தாய். ஒருபொழுது

இவ்வூரில் பிச்சையேற்றுண்டு சிவனடியார்களுக்கு மன மூவந்து பணிவிடை செய். கதிரவன் எழுமுன் எழுந்து அறுகுகொய்து பசுக்களுக்குக் கொடு. ஆர்வங் குன்ருமல் முப்போதும் கோயிலின் பின்பு உள்ள புறத்தொட்டித் தீர்த் தத்தில் நீராடி கூடற்பெருமான் கோயிலை நூற்றெட்டுமுறை மெய்வலஞ் (அங்கப் பிரதக்கணம்) செய்க.

"செங்கதிர்க் கடவுள் வானந் தீண்டுமுன்
னெழுந்து தீந்தண்
பைங்கதி ரறுகு கொய்து பசுக்களை யருத்தி யார்வம்
பொங்கமுப் போதுங் கோயிற்புறத்தொட்டித்தீர்த்தமாடிச்
சங்கரன் றனை நூற் றெட்டு மெய்வலஞ் சாரச் செய்தி."

இப்படித் தவருமல் செய்துவர இப்பாவம் கழியுமென்று அத்த ஞுரைக்க அம்மை கேட்கிருள். 'ஐய இக்கொடியோன் செய்த பாவத்திற்கு அளவற்ற காலம் கொடிய இருபத்தெட்டுகோடி நரகிடை வீழ்ந்தாலும் போதாதே - அப்படியிருக்க இவனுக்கு அருளியவாறு ஏது' என்று கேட்டாள்.

### எளியாரைக் காப்பதே கடன் :

அடுபழியஞ்சா இந்த நீசன் மாபாதகத்தின் பிடியிலிருந்து எங்கு சுற்றியும் விடுபட்டானில்லை. வேறு வழியில்லாத, பற்றில்லாத கடையவனுன இவனைக் காக்கும் செயலுக்கன்றே கருணை என்று பெயர் என்று விடை தந்தான் கருணைக்கடலன். உனது விளையாட்டை உள்ளவாறு உணர்ந்தோர் யாவர் ? செய்தற்கும் (கர்த்ருத்துவம்) செய்யாமைக்கும் (அகர்த்ருத்து வம்) வேருென்று செய்தற்கும் (அந்நியதா கர்த்ருத்துவம்) நீயே பொறுப்பாகிருய் என்று உமை மகிழ்ந்து கூறவும் வேடவடிவங்கொண்ட இருவரும் வெள்ளிமன்றுள் புகுந்து மறைந்தனர்.

இக்காட்சியெல்லாம் கண்டுநின்ற * ஆததாயி மனந் தெளிந்து மதியணிந்த மாதேவனை மூன்று மாதம் காலம் விடாமல் வணங்கி மாபாதகம் நீங்கினுன்.

---

* தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற்கொல்வார், களவுசெய்வார், ஆறலைப்பால், சூறைகொள்வார், பிறனில் விழைவார் இவர்களை வடநூலார் ஆததாயிகள் என்பர்.

சொற்பதங் கடந்த எந்தை சுந்தரன் திருவடிகளில் பற்பல வடசொல்மாலை அணிவித்து அப்புண்ணிய மறையவன் சிவனருளில் கலந்தான். புறத்தொட்டித் தீர்த்தம் இந்த பாதகத்தையே நீக்கவல்லது என்றால் பின்பு நீரிழிவு, குட்டம், பெருவயிறு, ஈளை (ஒருவித இருமல்) வெப்பு என்னும் நோய்களை நீக்கும் சக்தியுடையது என்று சொல்லவும் வேண்டுமா?

பார்ப்பனனை மாபாதகத்திலிருந்து மீட்ட பெருமானை வேந்தன், அமைச்சர், நகருளார், வானுளார் யாவரும் வியந்து போற்றி மகிழ்ச்சியுள் திளைத்தனர்.

( வளரும் )

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

"Today I had the good fortune of worshipping the Allmighty here in this famous temple of Tirugnanasambandar's Avataram with my family. As one enters the temple he has the feeling of the presence of the Almighty by the tidy condition in which the temple is kept. The authorities of the temple are so good minded that any one who comes here must and will have the satisfaction of having attained what he wanted."

(Sd.) C. K. Kuppannan,
District Judge
East Thanjavur.

9—1—70.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னுகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 29. இதழ் 2, பக்கம் 107 இன் தொடர்ச்சி )

उत्तमा दृष्टनक्षत्रा मध्यमा लुप्ततारका ।
अर्धोदितारुणा त्वन्या प्रातस्सन्ध्या त्रिधा मता ॥
मध्याह्ने च तथा ज्ञेया घटिकात्रयकल्पिता ।
अर्धास्तमण्डले श्रेष्ठा मध्यमास्तमिते रवौ ॥
अन्या तु दृष्टनक्षत्रा सायं सन्ध्या त्रिधा मता ।

— मोहशूरोत्तरम्

ततः सन्ध्यामुपासीत क्रमाद्वैदिकशैविकम् ।
स्नानं च तर्पणं कृत्वा प्राङ्मुखो वैदिकं चरेत् ॥
उत्तराभिमुखो भूत्वा शैवसन्धिक्रमं चरेत ।

அதன்பிறகு சந்தியாவந்தனம் செய்யவேண்டும். வரிசையாக முதலில் வைதிக சந்தியைக் கிழக்குமுகமாகவிருந்து செய்து பின் சைவசந்தியை வடக்குமுகமாகச் செய்யவேண்டும்.

— சூக்ஷ்மாகமம்

ஸ்னனம் செய்து எழுந்ததும் முதலில் வைதிக சந்தியைச் செய்து பிறகு சைவ சந்தியைச் செய்யவேண்டும்.

— அஜிதாகமம்.

தீக்ஷிதர்களான ஆசாரியன் உபநயன ஸம்ஸ்காரத்தினுல் ஏற்பட்ட வைதிக சந்தியாவந்தனத்தை முதலில் செய்து தீக்ஷையினுல் ஏற்பட்ட சைவ சந்தியைச் செய்யவேண்டும். வைதிக சந்தியாவந்தனத்தை விட்டால் ப்ராம்மணத்வம் போகும். சைவ சந்தியாவந்தனத்தை விட்டால் சமயத்தின் நழுவுதல் ஏற்படும். ஆதலால் இரண்டு சந்தியானுஷ்டானத்தையும் கண்டிப்பாய்ச் செய்யவேண்டும் என்று பத்ததிகளும் மூலாகமங்களும் கூறுகின்றன.

दक्षपाणितले कृत्वा मुक्तांगुष्ठकनिष्ठिके ।
सोमरूपं सिते पक्षे कृष्णे त्वर्कात्मकं स्मरेत् ॥
आत्मविद्या शिवैस्तत्त्वैः स्वधान्तैः प्रणवादिकैः ।

பசுவின் காதுபோல் வைத்துக்கொள்ளப்பட்ட வலது கையில் உளுந்து முழுகும் அளவு ஜலத்தை வைத்துக் கொண்டு மூன்று தத்துவங்களைச் சொல்லி ஸ்வதா என்பதை இறுதியில் சொல்லி உட்கொள்ள வேண்டும்.

கைகள் முழங்காலுக்குள் இருக்கவேண்டும். பருகும் போது சப்தம் கேழ்க்கக்கூடாது. பருகியவுடன் பெருவிரலால் உதட்டை இரண்டுதடவை துடைத்துக்கொண்டு அணிவிர லாலும் பெருவிரலாலும் நாசி, கண், காது, தொப்புள், மார்பு, தோள்கள், சிரசு என்ற இடங்களையும் தொடவேண்டும்.

ஆசமனத்திற்கு முன்பு ஜலசுத்தி செய்யவேண்டும். அதாவது ஜலத்தை சுத்திசெய்து சிவசத்திவடிவின தாக்குதல். கன்மங்கள் யாவும் மந்திரம் கிரியை பாவனை என்னும் மூன்று லும் செய்யப்படும். இதில் மந்திரம் அதி சூக்ஷ்மமாயும் கிரியை ஸ்தூலமாகவும் பாவனை சூக்ஷ்மமாகவும் பலனளிப்பதாம்.

மந்திரத்தின் அதிதேவதை முத்திரையால் ப்ரீதியுற்றுப் பாவனையை முற்றச்செய்யுமென்ப.

ஜலசுத்திக்கிரியை எட்டு. அதாவது நிரீக்ஷணம், புரோக்ஷணம், தாடனம், அப்யுக்ஷணம், தாளத்ரயம், திக்பந்தனம், அவகுண்டனம், தேனு முத்திரை என்பன.

நிரீக்ஷணம் பெருவிரல், ஆள்காட்டி விரலால் நியாசம் செய்யப்பட்ட மூலத்தையுடைய இரு கண்களால் பார்த்து ஜலத்திலுள்ள குற்றம் நீக்கி அது அமிருதமாக ஆனதாகப் பாவித்தல்.

புரோக்ஷணம் - விந்துஸ்தானத்தின் அமிருதத்தை எடுத்துத் தெளித்து மீண்டும் சுத்திசெய்தல்.

தாடனம் - மேலும் அந்நீரைத் தட்டிச் சிவசத்தி பிரகாசிக்கச் செய்யும் பாவனை.

அப்யுக்ஷணம் - நீரிற் றோன்றிய சிவசத்திப் பிரகாசமானது நீங்காவண்ணம் மூடும்பாவனை.

தாளத்ரயம் - அச்சத்தியினது பிரகாசத்தைக் கெடுக்க வரும் அசுரர் முதலியோரை (தீய எண்ணம் முதலியவற்றை) துரத்தும் பாவனை.

திக்பந்தனம் - மேல் துரத்திய அசுரர் முதலியோர் கிட்ட வராது எட்டு திக்கினும் காவல் செய்யும் பாவனை

அவகுண்டம் - மேல் சிவசத்தி பிரகாசமான இடத்தை மதிலாற் காவல் செய்யும் பாவனை

தேனு முத்திரை - அந்நீரிற் காமதேனுவின் பாலைப் பொழிந்ததாகச் செய்யும் பாவனை (பசுவின் நான்கு முலைபோல இரு கையின் பெருவிரல் நீக்கிய எட்டு விரல்களையும் சேர்த்த முத்திரை)

தருப்பணம் - அமிருதமாகிய அந்நீரைச் சூரியமண்டலத் துற்ற சிவபிரானுக்கு அளித்து உவப்பித்தல்.

இவ்வாறு செய்யும் தருப்பணத்தால் இறைவன் மகிழ் வெய்தி கன்மநீக்கத்தைச் செய்து அருளுவான் என்பது இதன் பாவனை.

மற்றும் சிவதீர்த்தகரணம், சந்தியாவந்தனம், மந்திராபிஷேகம், மார்ஜனம், அகமர்ஷணம், கவசவேஷ்டனம், தர்ப்பணம், தீர்த்தோபசம்ஹாரம் செய்து சூரிய உபஸ்தானம் செய்ய வேண்டும். ஜபம்.

त्रिसन्ध्यं शिवगायत्रीं जपेद्भक्तिसमन्वितः ।
एवं मन्त्रं जपित्वाऽर्घ्यं दत्वा सद्योविसर्जनम् ॥

—சிந்தியவிச்வஸாதாக்யம்.

மூன்று வேளையும் சிவகாயத்ரியை ஜபம்செய்து அர்க்கியம் கொடுத்து மந்திர தீபனத்தின் பொருட்டு சம்ஹிதையால் அர்க்கியம் கொடுக்கவேண்டும். — சூக்ஷ்மாகமம்.

இவ்வாறு மந்திரேச்வர்களுக்கும் முனிவர்களுக்கும், மனுஷ்யர்களுக்கும், பூதங்களுக்கும் பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்யவேண்டும். — காமிகாகமம்.

மந்திர தேவர்களுக்கு சுவாஹாந்தமாயும், முனிவர்களுக்கு நமோந்தமாயும் மனுஷ்யர்களுக்கு வஷடந்தமாயும், பூதங்

களுக்கு வௌஷடந்தமாயும், பித்ருக்களுக்கு சுவதாந்தமாயும் தர்ப்பணம் செய்யவேண்டும். — காமிகாகமம்.

தேவர்களுக்கு கராக்ரத்திஞலும் ரிஷிகளுக்கு பர்வசந்திகளாலும், தர்ஜனீமூலத்திஞல் பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்யவேண்டும்.

இவ்வாறு தர்ப்பணம் செய்து காயத்ரீ தியானபூர்வமாய் ஜபம் செய்யவேண்டும். "காயந்தம் த்ராயதே இதி காயத்ரீ" ஜபம் செய்பவனைக் காக்கிறது என்பதிஞல் காயத்ரீ என்று பெயர் வந்தது.

இந்த காயத்ரீ ஜபத்தை முக்காலங்களிலும் இயன்ற அளவு ஜபம் செய்யவேண்டும். பிறகு ப்ராஸாதமந்திர ஜபம் செய்து நித்யகிருத்தியம் ஆன்மார்த்த அனுஷ்டானம் முடிந்ததாக எண்ணவேண்டும்.

மந்திரங்கள் யாவும் குருமுகமாக அறியத்தக்கன.

मुक्ता विद्रुम हेमनील धवळच्छायैर्मुखैस्त्रीक्षणैर्युक्तमिन्दु कला निबद्ध मकुटां तत्वार्थ वर्णात्मिकां । गायत्रीं वरदाऽभयां कुश कशाश्शुभ्रं कपालं गुणं शंखं चक्रमथारविन्द युगलं हस्तैर्वहन्तीं भजे ॥

முத்து, பவளம், பொன், நீலம், தவளம் ஆகிய நிறங்களுள்ள ஐந்து திருமுகங்களுடையவராய், ஒவ்வொரு முகத்திலும் மும்மூன்று கண்களுடையவரர்ய், பிறையணிந்த ரத்ன மகுடத்துடன் கூடியவராய், தத்துவார்த்த ரூபியாய், பத்துத் திருக்கரங்களிலும் வரதம், அபயம், அங்குசம், சாட்டை, கபாலம், பாசம், சங்கம், சக்ரம், இரண்டு தாமரைப்பூக்கள் இவைகளைத் தரித்தவராயுமுள்ள காயத்ரீ தேவியை தியானிக்கிறேன் என்பது தியானத்தின் பொருள்.

स्नानं कृत्वा यथोक्तं तु रवेरर्घ्यं प्रदापयेत् ।
पूजकः पुष्पपाणिस्तु प्रविशेदालयं प्रति ॥
प्रक्षिप्य कुसुमं चाग्रे प्रणम्य शिवमादरात् ।

— சுப்ரபேதாகமம்.

(தொடரும்)

# இந்திரன்

வேதாந்தசிரோமணி

**பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்**

(மலர் 29, இதழ் 1, பக்கம் 49ன் தொடர்ச்சி)

ஒருநாள் நள்ளிரவிலேயே வைகறை என நினைக்கும்படி கௌதம முனிவரை இந்திரன் மயக்கினன். பொழுது புலர்ந்தது என நினைத்து முனிவர் ஸ்நானம் செய்யச் சென்றார். உடன் இந்திரன் கௌதம முனிவரின் வேடம் பூண்டு ஆச்ரமத்தில் பிரவேசித்தான். தேவராசன் என்று அறிந்து குதூகலமடைந்த அகல்யையுடன் இன்புற்றுத் திரும்பினன். முனிவரும் திரும்பி வந்துவிட்டார். கோபம் கொண்ட முனிவர், பெண்ணின்மேல் அதிக ஆசை வைத்தபடியால் உன் உடல் முழுவதும் பெண் குறிகளால் நிறைந்து விளங்கட்டும் என்று சபித்தார். பிறகு இந்திரனுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, உனக்கு மட்டும் அவை பெண் குறிகளாகத் தோன்றும் மற்றவர்கட்கு கண்ணாகத்தோன்றும் என அருளினர். இதனல் ஸகஸ்ரநேத்ரன், ஸஹஸ்ரநயனன் (ஆயிரங்கண்ணன்) ஸயோனி, நேத்ரயோனி என்ற பெயர்கள் இந்திரனுக்கு வழங்கலாயின. இம்மாதிரி வரலாறுகள் பல புராணத்தில் உள்ளன. ஆதலின் எடுத்துக் காட்டப்பட்டன.

ஆனல், ஆதிகாவ்யமான இராமாயணம் இங்கு, முனிவர் இந்திரனை ஆண்மை இழந்தவனுக ஆவாய் எனச் சபித்ததாகவும் பிறகு வேண்டுகோளுக்கு இரங்கி ஆட்டின் ஆண்மையை இந்திரனுக்குத் தேவர் பொருத்தியதாகவும் சாபத்தை வேறு விதமாகக்கூறும்.

இந்திரன் மழைபொழிவதாலேயே பயிர் புல் பூண்டுகள் உண்டாகி நாடு செழிப்படைகிறது. பசுக்களுக்கும் உணவு கிடைக்கிறது. ஆதலின் இந்திர பூசை செய்யவேண்டும் என்று யாதவர்கள் கூறி இந்திரபூசைசெய்ய முயன்றபொழுது யதுகுலத்துதித்த கண்ணன், இம்மலையால்தான் நம்முடைய பசுமந்தைகள் செழிப்படைகின்றன. ஆதலின் இம்மலேக்கு பூசை செய்ய

வேண்டும் என்றான். இதனால் இந்திர பூசைநின்றது. கோப மடைந்த இந்திரன் உண்டாக்கிய பெருமழையைக் கண்ணன் கோவர்த்தன பர்வதத்தைத் தூக்கிக் குடையாகப் பிடித்துக் காத்தான். இதனால் இந்திரனின் கர்வம் அடங்கியது என்று பாகவதம் கூறும்.

இந்திரபூசை ஐப்பசிமாதம் நடைபெறும் என்று ஆதி காவ்யம் ராமாயணத்தால் தெரிகிறது. இந்திரபூசை நடை பெற்ற செய்தி தமிழ் இலக்கியங்களிலும் கூறப்படுகிறது. தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனால் தொடங்கப் பட்டு நடந்துவந்த இந்திரவிழா நெடுமுடிக்கிள்ளியினால் செய்யப்படாமையால், தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டதாக மணிமேகலை கூறும். மேலும் தரிசித்தவரின் பழம் பிறப்பை அறிவிக்கும் புத்தபீடிகையைக் காக்க தீபதில கையை நியமித்தான் இந்திரன். உயிர்களைக்காக்குமாறு ஆபுத் திரனுக்கு வரமளித்தான். அவன் செழிப்பை உண்டாக்கினான். இதனால் இரப்பவர் இல்லாது ஒழிந்தனர் என்றும் மணிமேகலை கூறும். சிலப்பதிகாரமும் இந்திர விழாவைப்பற்றிக் கூறுகிறது.

முன்காலத்தில் பறவைகளைப்போல பர்வதங்களும் இறக்கை யுடையனவாக இருந்தன. அவை பறந்துசென்று கிராமங் களிலோ, நகரங்களிலோ உட்கார்ந்தான். அதனால் மிகவும் சேதமடைந்த மக்களின் வேண்டுகோளுக்கிரங்கி இந்திரன் மலைகளின் இறக்கைகளை வஜ்ராயுதத்தால் வெட்டினான். அக் காலத்தில் இமயமலையின் மகனான மைநாகம் காற்றின் உதவி யோடு விரைந்து சென்று கடலில் மூழ்கி தன்னுடைய இறக்கை களைக் காத்துக்கொண்டான். சீதையைத் தேடிச்சென்ற ஹனு மான் கடலைத் தாண்டியபொழுது, கடலில் மறைந்திருந்த மைநாகம் மேலே எழும்பி வந்து ராமகார்யத்தின்பொருட்டுக் கடலைத்தாண்டும் ஹனுமானைத் தன்மேல் நின்று இளைப்பாறிச் செல்லவேண்டினான். ஹனுமான் தாண்டிச் சென்ற பிறகு இந்திரன், தேவகாரியத்தில் ஈடுபட்ட இராமனுடைய தூத னுக்கு உதவி செய்தமைக்கு மகிழ்ந்து மைநாகத்திற்கு வரமளித் தான் என்று சுந்திரகாண்டம் கூறும்.

இந்திரனுடைய பிள்ளைக்கும், சூரியனுடைய பிள்ளைக்கும், சகோதரபாவமும், பகையும் இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களிலும் கூறப்படுகிறது. பிர்மதேவன் யோகத்தில் இருந்தபொழுது அவருடைய கண்ணிலிருந்து நீர் உண்டாயிற்று. அது ரிக்ஷரஜஸ் என்ற குரங்காக ஆயிற்று. இஷ்டப்படி சஞ்சரிக்கும் அது ஒருசமயம் மேருமலைக்கு வடக்கே உள்ள குளத்தில் நீர் அருந்தச்சென்றபொழுது நீரில்

தன் நிழலை மற்றொரு குரங்கென நினைத்து அதனுடன் சண்டையிடக் குளத்தில் குதித்தது, பிறகு பெண்ணுருவத்துடன் குளத்திலிருந்து எழுந்தது. அப்பொழுது இரவு சமீபித்தது. பயந்த அப்பெண் மெதுவாகச் சென்றபொழுது, அவளைக்கண்டு காமம்கொண்ட இந்திரனுடைய அம்சமாக அவளுடைய கூந்தலிலிருந்து (வாலம் - கூந்தல்) தோன்றியவன் வாலி. சிறிது நேரம் கழித்து சூரியன் அவ்வாறே அவளைக் காமுற, கழுத்திலிருந்து சூரிய அம்சமாகப் பிறந்தவன் (க்ரீவா - கழுத்து) சுக்ரீவன், வாலி சுக்ரீவன் என்ற சகோதரர், பிர்மதேவனின் கட்டளைப்படி கிஷ்கிந்தையில் வானர ராஜ்யம் நடத்தினர் என்று கூறும் இராமாயணம்.

திருமீயச்சூர் ஸ்தலபுராணமோ சூரியனுடைய சாரதியான அருணன் தொடையின் கீழே வளர்ச்சியடையாத நொண்டி. நொண்டி உருவத்துடன் வெளியில்செல்ல வெட்கமடைந்த அவன் பெண்ணுருவத்துடன் ஒருசமயம் சென்றான். அப்பெண்ணிடம் இந்திரன் அம்சமாக வாலியும், சூரியன் அம்சமாக சுக்ரீவனும் தோன்றினர் என்று கூறுகிறது. ஆனால் இரண்டிலும் தாயைப்பற்றிய வரையில் வேறுபாடு காணப்படினும் இந்திரன் பிள்ளை வாலி, சூரியனின் பிள்ளை சுக்ரீவன் என்பதில் மாறுபாடு இல்லை.

இராமாயணத்தில் இந்திரனுடைய பிள்ளை மூத்தவன். சூரியனுடைய பிள்ளை இளையவன், இந்திரனுடைய பிள்ளை தோல்வியடைந்தான், சூர்யனின் பிள்ளை வெற்றியடைந்தான் என்று கூறப்படுகிறது; பாரதத்திலோ சூரியபுத்ரன் கர்ணன் மூத்தவன் தோல்வியடைந்தவன். இந்திரபுத்ரன் அருச்சுனன் இளையவன் வெற்றியுடையவன் என்று காணப்படுகிறது.

துர்வாச முனிவருக்குப் பணிவிடை செய்தாள் குந்தி. அதனால் சந்தோஷமடைந்த முனிவர் குந்திக்கு வரமளித்தார். குந்திதேவி கன்னிப்பருவத்தில் இருக்கும்பொழுதே தனக்கு முனிவர் அளித்த மந்திரரூபமான வரத்தைச் சோதிக்க நினைத்தாள். அதன் பயனாக அவளுக்குச் சூரியனருளால், கவச குண்டலங்களுடன் தானசூரனான கர்ணன் குந்தியின் கர்ணத்தின் (காதின்) வழியாகத் தோன்றினான். கிந்தம முனிவரின் சாபத்தால் வருந்திய பாண்டு தனக்குப் புத்திரன் இல்லாமையை நினைத்து வருந்தியபொழுது. குந்திதேவி தான் கன்னிப் பருவத்திலேயே முனிவரின் மந்திரரூப வரம் பெற்றுள்ளேன். அதன் பயனாகப் பிள்ளையை யடைகிறேன் என அவனைத் தேற்றி, தர்ம தேவதையின் அம்சத்தால் தர்மபுத்திரனையும். வாயுவின் அம்சத்தால் பீமனையும், இந்திரனின் அம்சத்தால் அருச்சுனனையும் பெற்றாள் என்று மகாபாரதம் கூறும்.

போரில் அருச்சுனனின் வெற்றிக்காகப் பல தகாத செயல்களையும் இந்திரன் செய்துள்ளான். தான் அந்தணன் எனக் கூறிக்கொண்டு பரசுராமரிடம் வில்வித்தையைக் கர்ணன் கற்றுன். ஒருசமயம் பரசுராமர் கர்ணனின் தொடையில் தலையைவைத்து உறங்கினுர். இந்திரன் அப்பொழுது வண்டு ரூபத்தில் சென்று கர்ணனுடைய தொடையைத் துளைத்தான். இரத்தம் பீறிட்டு அடித்தது. குருவின் உறக்கத்திற்கு இடையூறு நேரலாகாது என நினைத்து கர்ணன் வலியைப் பொறுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பெருகிய குருதியினுல் நனைந்து எழுந்த முனிவர் கர்ணன் அந்நிலையிலும் பொறுத்திருப்பதைக் கண்டார். பிராமணன் இரத்தத்தைக் கண்டமாத்திரத்தில் பயந்திருப்பான். நீ அவ்விதம் இல்லை. ஆதலின் நீ யார்? உண்மையைக்கூறு என்று வினவினுர். பயந்த கர்ணன் தேரோட்டியின் வளர்ப்பு மகன் என்ற உண்மையைக்கூறினுன். சினந்த முனிவர் "நீ பிராமணன் என்று பொய்சொல்லி என்னிடம் கபடமாக வில்வித்தையைக் கற்றபடியால் அது சமயத்தில் மறந்துவிடும் என்று சபித்தார். கர்ணனுக்கு ஏற்பட்ட இச்சாபம் அருச்சுனனிடம் இந்திரனுக்கு இருந்த அன்பால் உண்டானது.

பிறவியிலேயே கவசகுண்டலங்களுடன் தோன்றியவன் கர்ணன். அவை அவனுடம்பில் இருக்கும் வரையில் அவனை அர்ச்சுனன் கொல்லமுடியாது. அதனுல் யாசகன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும் வள்ளலாகிய கர்ணனிடம் அவற்றைத் தானமாகப் பெறவேண்டும் என இந்திரன் நினைத்தான். இதை அறிந்த சூரியன் கர்ணனுக்குக் கனவிற்தோன்றி இந்திரன் அந்தண ரூபத்தில் இவற்றை யாசிப்பான் கொடுக்கலாகாது எனக் கூறினுன். அப்படியிருப்பினும் யாசித்த இந்திரனுக்கு கனவிற் சூரியன் சொன்னபடி ஒரு வீரனைக் கொல்லும் சக்திவாய்ந்த சக்தி என்ற ஆயுதத்தைப் பெற்றுக்கொண்டு கவச குண்டலங்களைக் கொடுத்தான். இதுவும் அர்ச்சுனனின் வெற்றிக்காக இந்திரன் செய்த சூழ்ச்சியாகும். அந்த சக்தி என்ற ஆயுதம், பாரதப்போரில் இரவில் கடோத்கசனுடைய வலிமை பொறுக்கமாட்டாமல் அன்று பிழைத்தால் போதும் என்று எண்ணி கர்ணனுல் அவன்மேல் ஏவப்பட்டு அவனைக் கொன்றது. அர்ச்சுனனைக்கொல்ல வாங்கிய சக்தி கடோத்கசனைப் பலியாகக் கொண்டு தீர்ந்தது.

வனத்திலிருந்து இந்திரன் அர்ச்சுனனை தேவலோகம் அழைத்துச்சென்று நிவாதகவசர் முதலிய தன் பகைவர்களை அழிக்கச்செய்தான். பிறகு அர்ச்சுனன் தேவலோகத்தில்

இருந்தபொழுது திலோத்தமை என்ற அப்சரஸ் அவனைக் காமத்துடன் அணுகினாள். நீ என் தந்தையின் அன்பிற் குரியவள். எனக்குத் தாய் ஆதலின் இது அடாத செய்கை என அர்ச்சுனன் அவளுக்குப்புத்தி பகன்றான். காமத்தால் அறிவிழந்த அவள் "அலியாக ஆவாய்" எனச் சபித்தாள். பிறகு இந்திரன் அச்சாபத்தை அர்ச்சுனனுக்குப் பயன்படும் வகையில் நீ அஞ்ஞாதவாசம் செய்யும் ஒரு வருஷம் வரை அச் சாபம் உனக்கு உண்டாகும் என்று மாற்றியருளினான். இவ் விதம் பலவகையில் தன் மகனுக்காக செய்த பல காரியங்கள் பாரதத்தில் கூறப்படும்.

வேதத்தில் "எங்குமே வெற்றியுடையவனாகக் கூறப்பட்ட இந்திரன் இதிஹாசங்களிலும் புராணங்களிலும், வெற்றியும் தோல்வியு முடையவனாகக் கூறப்படுகிறான். தேவவைத்யர்களான அச்வினி தேவர்களால் யௌவனமடைந்த ச்யவன முனிவர் தனக்கு யௌவன முண்டாக்கிய தேவ வைத்யர்களுக்கும் தாங்கள் செய்யும் வேள்வியில் ஸோமபானம் செய்விக்க முயன் றார். இதைப்பொறுக்காத இந்திரன் ச்யவனரைத்தாக்க தன்னுடைய வஜ்ர ஆயுதத்தைத் தூக்கவும், அக்கையை முனிவர் ஸ்தம்பிக்கச் செய்தார் என்பது பாரதம்.

இராவணனுடைய பிள்ளையாகிய மேகநாதன் இந்திரனைப் போரில் வென்றமையால் இந்திரஜித் என்று அழைக்கப்பட் டான். இதனால் இராவணனுடன் இராமன் போரிட்டபொழுது இராமனுக்குத் தன்னுடைய தேரை மாதலியின் மூலமாக அனுப்பினான். மேலும் போர்முடிந்த பிறகு மரித்த வானரங்களை யெல்லாம் உயிர் பிழைத்து எழும்படி செய்தான்.

சுவேதாகி என்பவர் யானையின் துதிக்கைபோன்ற நெய் தாரையைக்கொண்டு நீண்டயாகம் செய்தார். அதனால் அக்னி பகவானுக்கு ஜீரணசக்தி குறைந்துவிட்டது. திரும்பவும் ஜீர்ண சக்தியைப்பெற "காண்டவம்" என்ற வனத்தில் பல மூலிகை கள் இருப்பதால் அதையே சாப்பிட ஆரம்பித்தான். இந்திரன் அக்னியைத்தடுத்து விட்டான் இம்மாதிரி பலமுறை நடந்தது. பிறகு அர்ச்சுனனுடைய உதவிகொண்டு அக்னி காண்டவ வனத்தை எரிக்க முற்பட்டான். இந்திரனும் முன்போலவே மழைபொழிந்து அக்னியைத் தடுக்க முயன்றான். ஆனால் அர்ச்சுனன் அம்புகளாலேயே கூடுகட்டி அக்னியைக் காப்பாற்றி னான். இங்கு நடந்த போரில் தன் பிள்ளையாகிய அர்ச்சுன னிடமே இந்திரன் தோல்வியைக் கண்டான்.

(தொடரும்)

# தமிழ்ப் பட்டி மன்றங்கள்-ஒரு சிந்தனை

வேலன்

இன்றைய தமிழகத்தில் பட்டிமன்றம் என்ற அமைப்பு ஒன்று பெரிதும் பரவி நிற்கின்றது. பட்டிமன்றங்கள் இல்லாத இலக்கிய விழாக்கள் இல்லை; சமயங்கள் கூடப் பட்டிமன்றங்களை விழையும் நிலை ஏற்பட்டுள்ளது. இளைஞர்கள் பட்டிமன்றங்களையே விரும்புகின்றார்கள். கற்று வல்லவர்களில் ஒருசாராரும் கூடப் பட்டிமன்றங்களை நாடுகின்றார்கள். ஆங்காங்கு நிகழ்த்தப் பெறும் மகளிர் விழாக்கள் கூட ஓயாது பட்டி மன்றங்கள் நிகழ்த்துவதையே பெரிதும் கருதுகின்றன. வகுப்புக்கள் நடத்துவதை விட்டுப் பட்டிமன்றங்களாக நடத்துவதையே கல்லூரி முதலிய கல்விக்கூடங்களில் மாணவர்கள் மனமார விழைகின்றார்கள். வானொலி நிலையங்களுக்குப் பட்டிமன்றங்களை விட்டால் வேறு எதனையும் ஒலிபரப்ப மனம் இல்லை. இப்படி எல்லோர் மனத்தையும் ஈர்க்கும் பேராற்றல் மிக்க இந்தப் பட்டிமன்றத்தின் திறன்தான் என்ன ?

'பட்டிமன்றப் பாங்கறிதல்' என்பது அரிதினும் அரிது. சிலப்பதிகாரத்தில் பட்டிமன்றம் பூம்புகாரில் பொலிவுற்றிருந்தது. அதில் மரபறிந்து, பண்பாடறிந்து, கற்றமாந்தர் கவின் பெறத் தம் கருத்தை எடுத்துரைத்துப் பிறர் கருத்தை அறிந்து உரையாடினர்கள். தம் கருத்தை நிறுவிப் பிறர் கருத்தை மறுத்து மகிழ்ந்தார்கள். இதனால் உண்மையும் வலிவும் உள்ள கருத்து எது என உலகம் உவந்து களித்தது. இப்பட்டி மன்றங்கள் நிகழ்த்திய 'சொற்போர்கள்' அறிவுலக விருந்தாக அமைந்திருந்தன. பட்டினப்பாலையில், அறிவுடையோரைக் கூவியழைத்துச் சொற்போரிடும் அமைப்புக்களைப்பற்றி அறியலாம். இவ்வாறு பண்டு பயன்பட்ட பட்டிமன்றங்கள் இடைக்காலத்தில் வெவ்வேறு வடிவங்களில் விளங்கின என்று கூறலாம்.

நூல் அரங்கேற்றங்கள் சற்றேறக்குறையப் பட்டிமன்றங்களாகவே விளங்கின என்று கூறலாம். ஒரு நூலை அரங்கேற்றும்போது அரங்கிடை உள்ள நூலறிவாளர் இறுக்கும் வினாக்களுக்குத் தக்கவிடை பகர்ந்து தெளிவிக்கும் திறம்

உடையவராக நூலாசிரியர் இருந்தார் என்று தெரிகின்றது. திருவள்ளுவர் காலத்தேயே அரங்கேறியபோது அரும்புலவர் பலரும் கூறிய பாராட்டுரைத் தொகுப்பே திருவள்ளுவமாலை என்று தொகுக்கப்பட்டிருத்தல் தெளிவு. இது பலரால் இயற்றப்பட்டது என்பதனினும் ஒருவரால் இயற்றப் பட்டிருக்கக்கூடும் என்று எண்ணவும் இடம் உண்டு. மதுரைக் காஞ்சியில், "தொல்லாணை நல்லாசிரியர்" தம்மிற் கூடிப் பொரு ளாராய்ச்சி மேற்கொண்ட பெருஞ்சிறப்புப் பேசப்படுகின்றது. இவ்வாறே 'புலன் நாவிற் புதிது உண்ணும் கூடல்' மாநகரைப் பற்றிக் கலித்தொகை கூறும் செய்தியும் இங்கு அறியத்தக்கது. இவ்வாறு வரும் இலக்கியச் செய்திகளை நோக்கிட, அரங்கேற் றம் போன்று இலக்கியச் சிந்தனைகளை நிகழ்த்திடுகின்ற பழம் புலவர்கள் ஆங்காங்குக் கூடி மகிழ்ந்தனர் என்றறியலாம். 'தம்முள் மாறுபாடில்லாதவராய்க் கூரிய அறிவுடையார் தம்முட் குழுமிக் கலந்து மகிழ்தலினும் இனியபேறு வேறு ஏது' என்று நாலடியார் பாடுதல் இங்குக் கருதத்தக்கது ஆம்.

பழங்காலப் புலவர் பேரவைகள் அறிவு விளக்கம் காணு வதற்காகவும், புதியன காண்டற்காகவும், கண்ட புதிய கருத்துக் களைத் தம்முட் பரிமாறிக் கொள்ளுதற்காகவும் கூடிய சிறப்பையே நம் இலக்கியங்களால் அறிய முடிகின்றது. ஆனல் இக்காலத் திற் புற்றீசலென வரும் பட்டி மன்றங்கள் இவ்வடிப்படை நோக் கங்களோடு விளங்குகின்றனவா என்று சிந்தித்தல் வேண்டும்.

இக்காலத்திற் பட்டிமன்றம் என்பது விழாவிற்கு உறுப் பாகக் கருதப்படுகின்றது. அதற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் பொருளைப்பற்றி யாரும் கவலையுறுவதாகத் தெரியவில்லை. எப் பொருளை வேண்டுமாயினும் பட்டிமன்றத்திற்கு ஏற்போம் என்று எண்ணுகின்றோர் பலராக உள்ளனர். பொதுமக்களோ, பட்டிமன்றம் என்றால் வரன்முறையின்றி வாய்கூசப் பேசு வோரது வம்புரைகளைக் கேட்கலாம் என்ற கருத்தோடேயே திரளுகின்றனர். பட்டிமன்றத்திற்கு எடுத்துக் கொள்ளும் பொருள். சிந்தனையைத் தூண்டுவதாகவும், பேசுவோர் கேட் போர் மனஉணர்வினைத் தூண்டுவதாகவும் அமைதல் வேண் டும். அதன்கண் ஆராயப்பெறும் பொருள் நாட்டிற்கும் மொழிக்கும் பயன்தருவதாக இருத்தல் வேண்டும். பயன்படாத பொருள்கள் பட்டிமன்றத்திற்குத் தேவை இல்லை என்று ஒதுக்கப்பெறுதல் வேண்டும். பொருளற்ற சொற்போர்களிற் கலந்துகொள்ள மாட்டோம் என்று சொல்லவல்ல புலவர்கள் புறக்கணித்தல் வேண்டும். தக்க பொருள் இல்லையேல் நடுவர் கள் நடுவுரை வழங்க மறுத்தல் வேண்டும்.

பட்டிமன்றத்திற்கேற்ற பொருளாகக் கடவுளர் மனிதர்களை எடுத்துக்கொள்ளுதல் அத்துணை விரும்பத்தக்கதன்று. "தந்தது உன் தன்னைக் கொண்டதென் தன்னை" என்ற தொடரை ஆய்விற்குக் கொண்டு சதுரர் யார் — சிவனரா? மணிவாசகரா? என்று பட்டிமன்றம் இட்டுப் பேசுதல் விழையத்தக்கதன்று. இதன்கண் பல பொருந்தாக் கூற்றுக்கள் வர இடம் உண்டு. இவ்வாறே சிரிய நண்பர் யார் சுந்தரரா? சிவபிரானு? என்று எடுத்து ஆய முற்படுதல் அத்துணைத் தகுதிப்பாடுடையதன்று. மனிதவியல்பு தெய்வவியல்பு வேறுவேறுதலின் பொதுவாகக் கொண்டு பேசுதல் விழைவினை உண்டாக்காது; பலர்க்கு வெறுப்பினை உண்டாக்குதல் உண்மையே. அறுபத்துமூவர் திருத்தொண்டு நெறியைப் பட்டிமன்றத்திற்குக் கொண்டுவருதல் அறிவுலகத்திற்கு விருப்பூட்டுவதன்று. செயற்கருஞ் செயல் செய்து சிலரும், தம் தொண்டில் இயல்பாக ஈடுபட்டுச் சிலரும், இறையன்பில் நெகிழ்ந்துருகி நின்று சிலரும், ஆக மெய்யடியார்கள் வாழ்ந்து, திருத்தொண்டர் என்ற நிலையில் ஒன்றுனவர்கள்; சாதி, பொருளாதார நிலை, சமுதாய நிலைகளில் வேறுபட்டிருந்தாலும் பெருந்தொண்டர்களாக விளங்கும் வித்தகர்கள் அவர்கள். அவர்களை உயர்த்தித் தாழ்த்திச் சிந்திப்பதும், மக்களை அச்சிந்தனை வழிப்படுத்துவதும் பெருங்கொடுமைகள் என்றே உணரத்தக்கவை, சமயநெறி தலைப்பட்டுச் சிறந்த மாண்புடையோராவது. இத்தகு பட்டிமன்றங்களை நிகழ்த்தாதிருத்தலும், நிகழ்த்தத் துணைபுரியாதிருத்தலும், சமய உலகிற்கு இன்றியமையாதன என்று வேண்டுதல் மிகையன்று.

இலக்கியத்தில் ஊக்கம் விளைதற்கும், அவற்றை விழைந்து தெளிதற்கும் பட்டிமன்றங்கள் பயன்படுமாறு அமைதல் வேண்டும்; அந்நெறியில், திருவள்ளுவர் காலம், தமிழ் வடமொழி உறவு, தமிழ் பிறமொழிச் சொற்கலப்பு, திருவள்ளுவர் சமயம் முதலிய பட்டிமன்றத்தில் ஆராய்ந்து முடிவுபோக்க வேண்டிய பல பொருள்கள் உள்ளன. அவற்றைப்பற்றித் தமிழறிஞர்கள் பலரும்கூடக் கவலைப்படுவதாகக் காணவில்லை. தமிழ் அறிஞர்கள் அதுபற்றிச் சிந்தித்து ஒரு கூட்டறிக்கை விட்டுப் பொழுதுபோக்கும் வீண் பட்டிமன்றங்களில் தமிழ்ப் புலவர்கள் தங்கள் ஆற்றலைச் செலவுசெய்தலைத் தவிர்த்தல் வேண்டினுல் தக்க பயன் விளையாமற் போகாது. அண்மையில் ஒரு பட்டிமன்றம் திருவருட்பாக் குறித்துக் காண நேர்ந்தது. அமைதியும், ஆன்மீக நாட்டமும் விளைந்த நூல்கள் ஆரவாரத்திற்குக் கொண்டுவரத்தக்கன அல்ல. உணர்ச்சி நாட்டம் உடைய பனுவல்களை, நாடறிந்த சில மேலோர் ஆரவாரப்

போக்கிற்குக் கொண்டுவந்து அந்நாளைய இந்நாளைய அரசியற் கொள்கைகளை இடையிடைக் கலந்து பட்டிமன்றமாக்கி நாட்டைக் கெடுக்கும் தீயபோக்கில் இனியேனும் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்று வேண்டுவது இக்கட்டுரையாசிரியனின் நோக்கு ஆகும்.

பொழுதுபோக்குப் பட்டிமன்றங்களில் பேசும் புலவர்கள் கொள்கை - குறிக்கோள்களை மறந்து தாம் சார்ந்துள்ள குழுக்களுக்காகப் பரிந்து பேசுவதும், கையொலி பெறுவதற்காகக் கனன்று பேசுவதும், ஒருவரை யொருவர் பாங்கின்றிப் பேசுவதும், மேடை நாகரிகத்திற்குப் பொருந்தாத சொற்களை ஒலிப்பதும், வீணாக ஆரவாரம் செய்வதும் விழையத்தகுவனவல்ல. ஒரு காப்பியத்தை மற்றொரு காப்பியத்துடன் ஒத்திட்டு உரைப்பதும், ஒரு காப்பிய மாந்தரை மற்றொரு காப்பிய மாந்தருடன் ஒப்பிட்டுக் காண்பதும் நீக்கப்பெறுதல் வேண்டும். பட்டிமன்றங்களில் இத்தகுமுறைகள் பின்பற்றப்பெறுதல் வேண்டும். 'ஆடிக்காற்றில் அம்மி பறக்குமா - பறக்காதா?' என்பது போன்ற பொருளற்ற போக்கிற் பட்டிமன்றங்களை அமைப்போர் சிந்திப்பதற்கும், அவற்றிற் கலந்துகொண்டு பேரொலி எழுப்புவோர் எண்ணித் தெளிவதற்கும், அவற்றிற் சார்ந்து கேட்டதற்கெல்லாம் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கையின்றிப் பொழுதுபோக்கும் பொதுமக்கள் சிந்திப்பதற்கும் இங்கு உரைக்கப்பட்ட கருத்துக்கள் துணைபுரியும் என்பதும் இக்கட்டுரையாசிரியனின் நோக்கு ஆம்.

---

## திருநாவுக்கரசு நாயனார் அருளியது

திருச்சிற்றம்பலம்

ஆண்டானை அடியேனை யாளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் றன்னை
நேமிவான் படையானி னூரவோ னுகம்
கீண்டானைக் கேதார மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோ டென்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,

**வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.**

(மலர் 28, இதழ் 6, பக்கம் 339ன் தொடர்ச்சி)

## (18) திருநாளைப்போவார் நாயனுர்

"செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்"

—திருத்தொண்டத்தொகை.

சோழவள நாட்டில் கொள்ளிடக்கரையில் ஆதனூர் என்ற ஒரு சிற்றூர். வயல்வளம் நிறைந்த இவ்வூரின் புறத்தே புலைப்பாடியில் நந்தனுர் தோன்றினுர். சிவபெருமான் திருவடிக்கண் நீங்காத அன்புடையவராய் தம்மரபிற்கேற்ற சிவத் தொண்டுகளைச் செய்துவந்தார். திருக்கோயில்களுக்குப் பேரிகைத்தோல் விசிவார் முதலியனவும், வீணையாழ் முதலியவற்றிற்கு நரம்பும் அளித்துவந்தார். சிவபிரான் பூசைக்குக் கோரோசனை முதலிய பொருள்கள் அளித்து இறைவன் திருக்கோயிலின் புறத்தே நின்று ஆடுதல் பாடுதல் செய்து மகிழ்வதை வழக்கமாகக்கொண்டிருந்தார்.

நந்தனுருக்குத் திருப்புன்கூர் இறைவனை வழிபட்டு அருள்பெறும் விருப்புத் தோன்றியது. அவ்வூரையடைந்து கோயிற்புறத்தே உள்ள சந்நிதானத்தில் நின்று அகமகிழ்ந்து ஆடிப்பாடி சிவபெருமானை நேரே கும்பிடவேண்டுமென்ற பெருவிருப்போடு வேண்டினுர். இறைவன் இடபதேவரை விலகும்படிக் கட்டளையிட்டு நந்தனுருக்கு நேர்காட்சி வழங்கியருளினுன். நந்தனுர் திருப்புன்கூரில் திருக்குளம் ஒன்று அகழ்ந்து இறைபணிசெய்து மீண்டும் ஆதனூரை அடைந்தார்.

**நாளைப்போவார் :**

நந்தனுர் தம் ஊருக்கு அருகில் உள்ள சிவதலங்கள் பலவற்றையும் சென்று தரிசித்தார். தில்லைக்குச் சென்று

திருவம்பலத்தைத் தரிசிக்கும் வேட்கைகொண்டு அன்று இரவு முழுதும் உறங்காது விழித்திருந்தார். பொழுது விடிந்தது. தம் குலமரபிற்கு இசையாமையால் அம் முயற்சியை விடுத்தார். ஆசை மேன்மேலும் வளரும்போதெல்லாம் நாளைக்குப் போவேன் நாளைக்குப் போவேன் என்று எண்ணியும் சொல்லியும் வந்ததால் அவருக்கு நாளைப்போவார் என்ற பெயர் ஏற்பட்டது.

தில்லைத்தரிசனம் :

சிலநாட்கள் சென்றன. நந்தனார் தில்லைக்குப் போகத் துணிந்தார். தம்மூரைவிட்டுப் புறப்பட்டுத் தில்லையின் எல்லையை அடைந்தபோது அவருக்கு அளவிலா ஆர்வம் பொங்கியது. கீழே விழுந்து பணிந்து இரவும் பகலும் திருவீதியை வலம் வந்து பணிந்தார். திருவம்பலம் சென்று தரிசிக்க இயலாமையை எண்ணி வருந்தி அயர்ச்சியால் கண்ணுறங்கினார். இழிந்த பிறப்பு இறைவனை வழிபடத் தடையாயிருத்தலை எண்ணி உறங்கும் நாளைப் போவாரின் மனநிலையை உணர்ந்த நடராசப்பெருமான் 'இப்பிறவி நீங்கும்படி தீயினில் மூழ்கி வேதியர்களுடன் நம்மை வந்தடைக' என்று அருளிச்செய்தான். தில்லைவாழ் அந்தணர்கள் கனவிலும் தீவளர்த்துக் கொடுக்குமாறு பணித்தருளினான். மறுநாள் தில்லைவாழ் அந்தணர்கள் இறைவன் கட்டளைப்படியே நந்தனாரிடம் சென்று அருளிச்செயலை எடுத்துரைத்தனர். நந்தனாரும் நான் உய்ந்தேன் என மகிழ்து தொழுதார். தெற்கு மதிற்புறத்தே தீ வளர்க்கப்பட்டது. நந்தனார் இறைவன் திருவாணைப்படி தீக்குழியை வலம்வந்து சிவபிரான் திருவடிகளைச் சிந்தைசெய்து தீயினில் மூழ்கினார். மாயாகாரியமாகிய பொய்யுடல் மறைந்தது. நந்தனார் முப்புரிநூலுடன் சடாமுடியுடைய முனிவர்பிரானாய் வெளிவந்தார். தில்லை மூவாயிரவரும் கைகூப்பித்தொழுதுஅவரைத் தில்லைச்சிற்றம்பலத்திற்குஅழைத்து வந்தனர். நடன சபையை அடைந்த நாளைப்போவார் மறைந்தார். தில்லைவாழ் அந்தணர்களும் அடியார்களும் அதிசயித்தனர். திருவருளால் நந்தனார் ஆனந்தக் கூத்தாடும் ஐயனின் மலரடிக்கீழ் வாழும் மாண்பினைப் பெற்று இன்புற்றார்.

(தொடரும்)

# செய்திகள்

## தருமையாதீனஸ்தாபனங்களின் சார்பில் மாயூரம் வள்ளலார்கோயிலில் பாவை மாநாடு.

நாடு வாழவும், மக்கள் சமய நெறியை உணர்ந்து இறைவன் திருவருளைப் பெறுதற்பொருட்டும், நாடெங்கும் பல ஆண்டுகளாகப் பாவை விழாக் கொண்டாடப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாணையின் வண்ணம் பாவை மாநாடு இந்த ஆண்டு ஆதீன தேவஸ்தானங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தேவஸ்தானங்களின் சார்பில் மாயூரம் வள்ளலார் கோயிலில் 8—1—1970 முதல் 10—1—1970 முடிய மூன்று நாட்கள் பாவை மாநாடு நடைபெற்றது. வழக்கம்போல் வள்ளலார்கோயில் சன்னிதியில் அழகுற மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்ற அலங்காரப் பந்தலில், நிகழ்ச்சிகள் தொடங்கி நடைபெற்றன. மேடைக்கு அருகில் வெள்ளி விமானத்தில் பன்னிரு திருமுறைச் சுவடிகள் அலங்கரிக்கப் பெற்று எழுந்தருளுவிக்கப் பெற்றிருந்தன. சீர்காழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மஹாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். முதல்நாள் விழா பட்டிமன்ற நிகழ்சியாக அமைந்திருந்தது. ''மணிவாசகர் படைப்புக்களில் பெரிதும் சிறந்தது பாவையா? கோவையா?'' என்பது பட்டிமன்றத் தலைப்பு. வரவேற்புரைக்குப் பின்னர் மாயூரம் A. V. C. கல்லூரி முதல்வர் திரு. M. விசுவநாதன் M.A., அவர்கள் தொடக்க உரையாற்றினார்கள். சென்னை 'கலைமகள்' ஆசிரியர் செந்தமிழ்செல்வர் திரு. கி. வா ஜகந்நாதன் M.A., அவர்கள், பட்டிமன்றத் தலைமையமர்ந்து விரிவுரையாற்றினர். பாவையே! என்ற தலைப்பில் திரு. ஔவை. து. நடராசன் M.A., அவர்களும், வித்துவான் திரு. வி சா. குருசாமி தேசிகர் அவர்களும், திரு. சி. இராமலிங்கம் M.A., அவர்களும் உரை நிகழ்த்தினர். கோவையே என்ற தலைப்பில் திரு அ. கலியபெருமாள் M.A., அவர்களும், வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களும், வித்துவான் திருமதி. ப. நீலா அவர்களும் உரையாற்றினர். தலைவர் தமது முடிவுரையில் 'பாவையே! மணிவாசகர்

படைப்புக்களில் பெரிதும் சிறந்தது' என்று தமது கருத்தை வெளியிட்டார். மதுரை T. N. சேஷகோபாலன் B. Sc., குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது

9—1—70 வெள்ளிக்கிழமை திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் B.A., B.L., அவர்களும், செஞ்சொற்கொண்டல் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனுர் M.A., அவர்களும், வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களும் பாவைப்பாடல்களைப்பற்றி மிகச் சிறப்பாக உரையாற்றினர்கள். கணநாதர் பொம்மை நாடக சபாவின் பொம்மலாட்ட நிகழ்சியோடு இரண்டாம் நாள் நிகழ்ச்சி நிறைவுற்றது.

10—1—70 சனிக்கிழமை திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர் அவர்களும், வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்களும், வித்துவான் திரு. வி. சபேசனர் அவர்களும் விரிவுரையாற்றினர். வேலூர் ஸ்ரீ தையல்நாயகி அன்பில்லத்துப் பழைய மாணவி திருமதி பாலா குழுவினரின் 'சிவனருட் செல்வி' என்னும் நாட்டிய நாடகம் நடைபெற்றது. இரவு 8-00 மணி அளவில் திருமுறை இசைவாணர்களின் திருமுறைப் பாராயணத்துடன் யானைமேல் திருமுறைத் திருவீதியுலா சிறப்பாக நடைபெற்றது. மூன்று நாட்களிலும் அன்பர் ஏராளமாக வந்து விழா நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டு விழாப் பயன் பெற்றனர்,

## பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் பாவை மாநாடு ஆண்டுதோறும் நிகழ்வதுபோல் இவ்வாண்டும். சௌமிய ஆண்டு மார்கழித் திங்கள் 22. 23ஆம் நாட்களாகிய செவ்வாய் புதன்கிழமைகளில் (6—1—70 7—1—70) 6 மணி முதல் நடைபெற்றது. மாநாட்டின் தொடக்கத்தில் பாவைப்பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமிதேவஸ்தானத்திலும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்திலும், மார்கழி 27, 28 ஆம் நாட்களாகிய ஞாயிறு, திங்கட்கிழமைகளில் (11, 12—1—70) மாலை 6 மணி முதல் பாவை மாநாடு தொடங்கி நடைபெற்றது.

**வேளூரில் :**

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 6-1-70 செவ்வாய்க்கிழமை, தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "கோயிற் பிணைப்பிள்ளைகாள்" என்ற தலைப்பிலும், திரு. கோ. தனவேல் பிள்ளை அவர்கள் "வாதவூர் வள்ளல்" என்ற தலைப்பிலும், 7—1—70 புதன்கிழமை, சிவநெறிச்செல்வர், வித்துவான். திரு. K. M. வேங்கடராமையா M.A., அவர்கள் "பக்தி நெறியில் பாவைப்பணி" என்ற தலைப்பிலும், செஞ் சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம்.ஏ. டிப். லிங். வாதவூரர் காட்டும் வாழ்வியல் என்னும் தலைப் பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் உட னிருந்து மாநாட்டைச் சிறப்புற நிகழ்த்துவித்தார்கள்.

**திருபுவனத்தில் :**

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 6-1-70 செவ்வாய்க்கிழமையன்று வித்துவான். திருமதி. ப. நீலா அவர்களும், தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு வை. மு. சண்முக தேசிகர் அவர்களும் 7-1-70 புதன்கிழமையன்று, தருமையாதீனப் புலவர் வித்துவான். திரு. இராம. கோவிந்த சாமிப் பிள்ளை அவர்களும், மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்களும் முறையே "கண்ணாரமுதம்", "திருமுறைகளும் திவ்யப் பிரபந்தங்களும்", 'பாவையும் கோவையும்" "வளர்த்தெடுத்த பெய்வளை" என்ற தலைப்புக் களில் சொற்பொழிவாற்றினர்.

**திருக்கடவூரில் :**

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத் தில், 6-1-70 செவ்வாய்க்கிழமையன்று வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்களும், வித்துவான். திரு கு. சுந்தரமூர்த்தி B. A., அவர்களும், 7-1-70 புதன்கிழமையன்று வித்துவான், திருமதி. ப. நீலா அவர்களும், வித்துவான். திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்களும் "அவள் சுரக்கும் இன்னருள்", "மார்கழி நீராடல்", "உனக்கே அடைக்கலம்", "பாவை நெறி" என்ற பொருள்பற்றிச் சொற்பெருக்கு ஆற்றினர்.

**திருக்குவளையில் :**

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 6—1—70 செவ்வாய்க்கிழமை வித்துவான். திரு. மு. சுந்தரேசம் பிள்ளை அவர்களும், திருவாரூர் வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களும், 7—1—70 புதன்கிழமை திரு. கோ. தனவேல் பிள்ளை அவர்களும், தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்களும், "பாவை நெறி", "திருவெம்பாவை", "பாவையும் பள்ளியெழுச்சியும்", "திருவாசகத்தேன்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

**திருப்பனந்தாளில் :**

திருப்பனந்தாளில் 11—1—70 ஞாயிற்றுக்கிழமையன்று செஞ்சொற்கொண்டல். வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M. A, Dip-Ling., அவர்கள் "திருவாசக ஒளிநெறி" என்ற பொருள்பற்றியும், முதுபெரும்புலவர், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் "முன்சுரக்கும் இன்னருள்" என்ற பொருள் பற்றியும், 12—1—70 திங்கட்கிழமை திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற பொருள் பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், வித்துவான். திரு. சு. சாமிஐயா M. O. L. அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் சொற்பெருக்கு ஆற்றினர்.

**திருவையாற்றில் :**

திருவையாற்றில் 11—1—70ஞாயிற்றுக்கிழமை திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்களும், திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், 12—1—70 திங்கட்கிழமை திரு. அ. கலியபெருமாள் M. A., அவர்களும், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்களும் முறையே "வாதவூரர் வாய்மைநெறி", "எம்பாவை எழில்", "பள்ளியெழுச்சிப் பாடல்", "திருவாசகத் தேன்" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் பல அன்பர்கள் வந்து கலந்து கொண்டு சொற்பொழிவுகளைக் கேட்டுப் பாவைப் பாடல்களின் பயனை உணர்ந்து மகிழ்ந்தனர்.



கலியுகத்தில் சித்தர்கணம் தேவாமிர்தத்தால் இறைவனை அபிஷேகிக்க, அவ்வமிர்தம் கோயிலினுள் அமைந்திருக்கும் தீர்த்தத்தில் கலந்து சித்தாமிர்தத் தீர்த்தம் என வழங்கலாயிற்று.



காமதேனு தனது பாலால் இறைவன் திருமுடியில் அபிஷேகிக்க
அப்பால் பெருகிக் கலந்தமையால் கோக்ஷீர தீர்த்தம் ஆயது.

# பாரிச வாதம்

## (ஸ்தம்பரோகம் - Paralysis)

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

(மலர் 28, இதழ் 6, பக்கம் 357 இன் தொடர்ச்சி)

இதற்கு முன் அத்தியாயத்தில் வாதரோகம் வருவதற்கான காரணங்களை அறிந்தோம். இப்பொழுது அதற்கான சிகிச்சை முறைகளை இங்கு ஆராய்வோம்.

பாரிசவாதம் ஏற்பட்ட உடன் சிலர் அவசியமில்லாமல் ரத்தத்தை எடுக்கவேண்டும் என்று சொல்லுவார்கள், அதனுல் எவ்வித பயனுமில்லை. ஆனல் நன்ருக பேதி ஆகும்படி சிவிதை வேர், கடுகுரோகனி, சூரத்துநிலாவரை, நேர்வாளம் போன்ற பேதி மருந்துகளைக் கொடுத்து ரச சம்பந்தமான பஸ்பம் அல்லது செந்தூரம் கொடுப்பதில் அனுகூலம் ஏற்படும். அசைவற்றுப்போன கையையும் காலையும் முடக்கி கண்டறிந்து அதன் தசைகள் தளர்ந்திருந்தால் மூளை பலஹீனமடைந்திருக்கிறது என்று நாம் அறியவேண்டும். மூளைக்குச் செல்லும் ரத்த ஓட்டம் தடைப்பட்டு அதனுல் மூளை வெளுத்து மிருதுவாகிவிடும். ஆதலால் அந்தக்காரணத்தை அறிந்து ஒயின் சாராயம் முதலிய உஷ்ணகாரி மருந்துகளையும் உஷ்ணமான பானங்களையும் கொடுத்து உஷ்ணப்படுத்தி பலம் வரும்படி செய்து ரோகத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டியது. நோயுற்ற காலையும், கையையும் முடக்கிப் பார்க்கும்போது தசை நார்கள் அல்லது சதைகளுக்கு ஒருகால் பிகுகண்டறிந்தால் ரத்தம் உறைந்து மூளையில் தங்கி அதிர்ச்சி கண்டிருக்கிறது என்று அறிய வேண்டும். இதற்கு உடனே பேதி மருந்து கொடுப்பது நல்லது. மூளையில் வியாதி இல்லை என்று நிச்சயமாக அறிந்து கொண்டால் எட்டிக்கொட்டை சம்பந்தமான மருந்துகள் கொடுத்தால் தசைகளில் அசைவு ஏற்படும். அப்போது அம் மருந்தைச் சமயம்போல் குறைத்தே கொடுக்கவேண்டும். உடனடியாக கற்பூரத்தைலம், நேர்வாள மேற்பூச்சுத் தைலம், விஷமுட்டி தைலம் ஆகியவைகளில் ஏதாவது ஒன்றைத்தேய்த்து ஒத்தடம் கொடுப்பதால் நல்ல குணம் ஏற்படும். மூளையில்

வியாதி கண்டிருந்தால் இதை உபயோகிக்கக் கூடாது. வெட்டி வேரையாவது, பேய்மிரட்டி இலையையாவது தண்ணீர் விட்டு நன்ருகக் காய்ச்சி நோயுற்ற பாகத்தில் பொருக்கக்கூடிய அளவுக்கு விட்டுக் கழுவலாம். கடுகு, சுக்கு இரண்டையும் தண்ணீர்விட்டு அரைத்து நடு முதுகு தண்டிற்குப் போடலாம்.

## இளம் பிள்ளை வாதம் :—

இந்த வாத ரோகங்கள் பெரும்பாலும் இளம் குழந்தைகளுக்குக் கால்களை மாத்திரம் அசைவற்றுப் போகச் செய்கிறது. கொஞ்சம்கொஞ்சமாகக்கால்களுக்கும் பாதங்களுக்கும்பலகீனமும் திமிரும் கண்டு பிறகு அசைவற்றுப் போவதுண்டு. வலி இருக்காது. கொஞ்சம் கொஞ்சமாக அசைவும் உணர்ச்சியும் கால்களுக்கு இல்லாமல் மூத்திரப்பை, குதம் இவைகளின் அசைவும் அற்றுப்போகும். இந்த ரோகம் கண்டவர்கள் பெரும்பாலும் அசைவற்றுப் படுத்திருப்பதால் ஒரு பக்கத்தில் ரணங்கள் (Bed sour) உண்டாகும். இவ்வாறு ஏற்பட்டால் பிழைப்பது அரிது மூத்திரம் போகாமல் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கினல் அதுவே நார்போல் ஆகி அதில் துர்வாசனையும் நெடியும் உண்டாகும். சிறு குழந்தைகளுக்கு அதிக சுரம் காணும் வேகத்தினல் கூட இந்த வியாதி சம்பவிப்பது உண்டு.

## சிகிச்சை :—

மேற்கண்ட வியாதிக்கு சிகிச்சை செய்வதில் கவனம் வேண்டும். தசைகளுக்குப் போகிற நரம்புகளுக்கு அதிர்ச்சி கண்டால் (fits) இசிவு, கொருக்கைவலி, படபடவென்று சதைகள் அடித்துக் கொள்ளுதல் ஆண்குறி விம்மல் காணுதல் ஆகிய குறிகள் காணப்படும். ஸ்பரிச நரம்புகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டால் நமைச்சலும் சொரிதலும் அடிக்கடி உடல் சூடாவதும் பிறகு குளிர்ச்சியாய் இருப்பதுபோலும் உணர்ச்சிகள் ஏற்படும்-படுக்கை ரணமும் ஏற்படும். இதைப்போன்ற வியாதிகளுக்கு ஊமத்தை இலையையாவது, காய்களையாவது அரைத்து முள்ளந்தண்டிற்குப் பற்றுப்போடலாம். இதனல் கொஞ்சம் சுகம் ஏற்படும். மீன் எண்ணை கொடுக்கலாம். குரோசாணி ஓமம், சுத்தம் செய்த கஞ்சா, நல்ல போசனம் ஒயின் போன்ற மது வகைகள் நன்மை செய்யும். உஷ்ணம் உண்டாகக்கூடிய பூச்சுத் தைலம் முள்ளந்தண்டிற்குத் தேய்த்து ஒத்தடம் கொடுப்பதால் ரத்தவிருத்தி உண்டாகும். அயச்செந்தூரம் போன்ற செந்தூரங்கள் நன்மை செய்யும். வயிற்றுக் கிருமிகளைப் போக்கி சர்ம ரோகங்கள் இல்லாமல் செய்வதால் இந்த ரோகத்திற்கு

சுகம் ஏற்படும். வாத ரோகத்தில் இன்னும் பல விதங்கள் உண்டு. வாயைக் கோணலாக்கக் கூடிய முகவாதமும், தாள்களையே திறக்க ஒட்டாத தாள் வாதமும், கண்களில் ஏற்படக் கூடிய கண்வாதமும், கை கால்களை நடுக்கக்கூடிய நடுக்கு வாதமும் ஏற்படுவது சகஜம்.

பெரும்பாலும் இந்த ரோகங்கள் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்களுக்கு ஏற்படுவதில்லை. பலஹீனம் உள்ளவர்களையும் பித்த ரத்த கொதிப்பு உடையவர்களையும் சில அதிர்ச்சியினால் இந்த வியாதி தீவிரமடைந்து பலவிதமான கெடுதல்களையும் செய்கிறது. இதைத் தடுப்பதற்கே நல்ல தேக ஆரோக்கியத்துடன் உடலைப் பேணி வளர்ப்பது அவசியம்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Velur Siddha Vaidya Sala, Vaithiswarankoil.

சித்த வைத்திய சிகாமணி செய்யும்
மூலிகை வைத்திய முறையைக் கண்டேன்
அரிய மருந்துக் குரிய தோட்டம்
தோட்ட மருந்தைத் தொகுத்த நல்லாய்வகம்
ஆய்வகத்திலே தாய்ச்சரக் கெல்லாம்
சேர்த்து மருந்துகள் செய்யும் பண்பு
பண்பிற் கேற்ற பயன்பெறு சிகிச்சை
கண்டு கண்டு களிப்புற் றேனே
மருத்துவ மணியாம் இராம கிருஷ்ணன்
பொருத்தமாய் உதவப் பொலிமிகு தருமை
நாட்டிய மூலிகை நற்பெருஞ் சாலை
தழைத்து நீ டோங்குக தம்பிரான் புகழ்போல்.

(ஒ-ம்.) யோகி சுத்தானந்த பாரதி,
23—1—70 யோக சமாஜம்,
அடையாறு, சென்னை.

# எதிர்காலம்

திரு. K. முத்துஜோதிடர்

( சௌமியஸூ மாசிமீ 1உ முதல் 30உ முடிய )
( 12—2—70 முதல் 13—3—70 முடிய )

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமுண்டாகும். விவகாரம் ஜெயிக்கும், ஆரோக்யம் தரும். குடும்பம் அமைதியாகவும் சந்தோஷமாயும் இருந்துகொண்டு இருக்கும்; கிரய விக்ரய பலத்தால் பூர்ணசுபம் உண்டாகும், ஜீவனம் ஓங்கும், வியாழன், வெள்ளி சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். ஸ்திரமான சுகமான ஜீவனம் கிடைக்கும், பெற்றோர்களாலும் சிநேகிதர்களாலும் நன்மை உண்டாகும். ஆரோக்யம் உண்டாகும். எங்கும் நல்ல கீர்த்தி உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தூர தேசத்திலிருந்து அழைப்புப்பத்திரம் வரும். ஆரோக்யம் உண்டாகும். குடும்பம் ஓங்கும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்பட்டுக் கொண்டு இருக்கும். வரவு செலவு சமமாக இருக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத் தரும். விவசாயத்தால் நல்ல பலன் கிடைக்கும். கிரயவிக்ரயம் லாபத்தோடு ஏற்படும். கடன் நீங்கும். விவகாரம் ஜெயிக்கும். அடிக்கடி குடும்பத்தில் சுபகாரியங்கள் ஏற்படும். மேலோர் பெரியோர்களுடைய ஆசிகள் கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும் உத்தியோகம் விருத்தியாகும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு கிடைக்கும். வம்சம் விருத்தியாகும் கீர்த்தி உண்டாகும், குடும்பம் தழைத்து ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

6 கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். ஆரோக்யம் உண்டாகும். மேலோர் பெரியோர்களுடைய அன்பும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கும் ஜீவனம் ஓங்கும். நஷ்டமான பொருள் தானாக வந்துசேரும். சகல காரியங்களும் வெற்றி அடையும். தெய்வசக்தி பிரகாசிக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். ஜீவனம் ஓங்கும். தனதான்ய விருத்தி ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். தெய்வசக்தி முன்னின்று காக்கும். வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாத காரியங்கள் எல்லாம் சாத்தியமாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலத்தையே தரும். விவாஹாதி சுபகாரியங்கள் நடைபெறும். வித்தியாவிருத்தி உண்டாகும். வீடு கட்டுதல் வாங்குதல் முதலிய சுபங்கள் உண்டாகும். மேல் அதிகாரிகளின் உதவியால் ஜீவனம் மேன்மை அடையும். பெற்றோர்கள் சௌக்யம் அடைவார்கள். வியாழன். வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். இல்லறம் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். எதிர்பாராத விசேஷ லாபங்கள் சிநேகிதர்கள்மூலமாகக் கிடைக்கும். கடன் நிவர்த்தியாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் சுபத்தையே தரும். தன் புத்திர சௌக்கியம் உண்டாகும். விவசாயம் ஓங்கி விசேஷ லாபம் தரும். மாதாபிதாக்களுக்கு சௌக்கியமும் மேலோர் பெரியோர்களுடைய அன்பும் கிடைக்கும். உத்தியோகம் ஓங்கும். ஆரோக்யம் தரும். ஸ்திரமாகவும் சுகமாகவும் ஜீவனம் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**11. கும்பம் - அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.**

கும்பராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வைத்தியசெலவு குறையும். புத்திராதிகளால் சந்தோஷம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். தனதான்ய சமிருத்தி ஏற்படும். உலக பிரசித்தி ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

**12. மீனம் - பூரட்டாதி ¼, - உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஜீவனம் ஓங்கும். சஞ்சாரபலன் அதிகமாகும். பெரியோர்களாலும் மேலோர்களாலும் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். வித்யாவிருத்தியாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு:— டி மாசிமீ கும்பஸங்கிரமணம், மாலை 4 வது யாமத்தில் பிரவேசம் ஏற்படுவதாலும், மாசியில் குரு சுக்கிரான் இருவரும் வக்ரமும் அஸ்தமனமும் அடைவதாலும், டிமீ 11உ முதல் 22உ முடிய, மகர கும்பத்தில் ஏகாதிபத்திய ராசியில் ரவி, சந்திரன், புதன், சுக்கிரன், ராகு இவர்கள் பஞ்சகிரஹகூட பலனை அடைகிறபடியாலும், டி மாத பலன் உலகத்திற்கு நன்மையைத்தரவேணும். பஞ்சபூதங்களும், சாந்தமடைய பிரார்த்திக்கவேணும், சகலஸம்பத்ஸமிருத்தியும் ஸ்திரமடைய பிரார்த்தனைபலம் அவசியம். மஹாஜனங்கள், குருமார்கள், பெரியோர்கள், சாதுக்கள், பக்திமான்கள், பதிவிருதா மகா ஜனங்கள், இவர்களுடைய தபோபலத்தாலும், தெய்வ சக்தியாலும், உலகம் ரக்ஷிக்கப்படவேணும். இதுமுதல் உத்தராயணம் முடிய சதா தெய்வ சிந்தனையும், புண்ணய க்ஷேத்திரங்களில், அங்காரகன் மேஷத்தில் சனியோடுசேர்ந்தும் பிரதானம் வகிப்பதாலும் லிங்கமூர்த்திக்கு அடிக்கடி சீதலகும்பம்வைத்து, ருத்திரா ஆராதனையும் மறக்காமல் நடத்திவர சுபமுண்டாகும். உலகம் அமைதியுடன் சந்தோஷம் அடையும்.